பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 பங்குனி 19 புதன்கிழமை (01.04.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:126

## சர்வதேச அழுத்தங்களுக்கு மசிய மாட்டோம்

# அரசாங்கம் எந்தச் சூழ்நிலையிலும் புலிகளுடன் போர் நிறுத்தம் செய்யாது!

## களுத்துறை கட்சி அமைப்பாளர் கூட்டத்தில் ஜனாதிபதி அறிவிப்பு



கொழும்பு, ஏப்ரல் 1

அரசாங்கம் எந்தச் சூழ்நிலையிலும் விடுதலைப் புலிகளுடன் போர்நிறுத்தம் செய்யமாட்டாது. சர்வதேச ரீதியான எந்த அழுத்தங்களுக்கும் நாம் மசிந்து விட மாட்டோம்.

அழுத்தங்கள் சர்வதேச மட்டத்தில் இருந்து வந்தாலும் சரி, உள்நாட்டில் உள்ள சர்வதேச வட்டாரங்களில் இருந்து வந்தாலும் சரி, போர் முழு அளவில் முடிவடையும் வரை - நிறைவு பெறும் வரை - அதனை நாம் நிறுத்தப் போவதில்லை.

இவ்வாறு மிகத்திட்டவட்டமாக அறிவித்துள்ளார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## பல்குழல், ஷெல் தாக்குதலில் காயமுற்ற 282 பேர் புதுமாத்தளன் ஆஸ்பத்திரியில்

கொழும்பு, ஏப்.1

முல்லைத்தீவு மாவட்டத்தில் இராணுவத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் இடம்பெற்று வரும் மோதல்களால் ஷெல் வீச்சுக்களால் நேற்று மாலை வரையான 48 மணி நேரத்துக்குள் மட்டும் காயமடைந்த 282 சிவிலியன்கள் புதுமாத்தளன் வைத்தியாசலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

முல்லைத்தீவு மாவட்ட சுகாதார சேவை

(16 ஆம் பக்கம் பார்க்க)

## மனிதாபிமான போர் இடை நிறுத்தம் குறித்து அரசாங்கம் ஆராய்கிறது -கோஹண

கொழும்பு, ஏப்.1

விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கையில் மனிதாபிமான யுத்தநிறுத்த மொன்றை மேற்கொள்வது குறித்து ஆராய்ந்து வருவதாக இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

அரசு மனிதாபிமான போர் இடைநிறுத்தம் குறித்து பரிசீலிக்கின்றது என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலித கோஹண பி.பி.சிக்குத் தெரிவித்துள்ளார்.

இதற்கான ஏற்பாடுகள் குறித்து விரை

(16 ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்பு, இரணைப்பாலைப் பகுதிகளில் நேற்றுக் கடுஞ்சண்டை: இரு தரப்புக்கும் இழப்பு

கொழும்பு, ஏப்.1

முல்லைத்தீவு களமுனைகளில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரச படைகளுக்கும் இடையில் தொடர்ந்து கடுஞ்சமர் இடம்பெற்று வருகின்றது என படைத் தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

எனினும், இச்சமரில் இருதரப்புக்களுக்கும் இழப்புகள் ஏற்பட்டுள்ளன எனப் படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு கிழக்குப் பகுதிகளில் நிலைகொண்டிருக்கும் 58ஆவது படைப்பிரிவுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடுஞ்சமர் இடம் பெற்றுள்ளது. (16 ஆம் பக்கம் பார்க்க)

# வவுனியா அகதி முகாம்களிலிருந்து படையினரை அகற்றியது அரசு

## ஐ.நா. வேண்டுகோளை ஏற்று நடவடிக்கை என்கிறார் சமரசிங்க



கொழும்பு, ஏப்.1

ஐக்கிய நாடுகள் சபை இலங்கை அரசு மீது தொடர்ச்சியாக மேற்கொண்டு வந்த அழுத்தங்களையடுத்து, வவுனியா அகதிமுகாம்களில் பிரசன்னமாகியிருந்த படையினர் அங்கிருந்து மீள அழைக்கப்பட்டுள்ளனர் என்றும் அந்த முகாம்கள் அனைத்தும் இப்போது மீள்குடியேற்ற அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன என்றும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்கவே இவ்வாறு கூறினார். அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து தப்பி வந்த சுமார் 61 ஆயிரம் மக்கள் வவுனியாவில் அமைக்கப்பட்டுள்ள 12 அகதி முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இந்த மக்கள் சிவில் நிர்வாக அதிகாரிகளினால் பராமரிக்கப்படுகின்றனர். (16 ஆம் பக்கம் பார்க்க)

## உணவு,மருந்துப் பொருள்களை வன்னிக்கு அனுப்ப ஏற்பாடு

கொழும்பு, ஏப். 1

பாதுகாப்பு வலயத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பொது மக்களுக்கு தமிழ்- சிங்கள புத்தாண்டை

(16 ஆம் பக்கம் பார்க்க)

**மறந்துவிடாதீர்கள்,**
**இன்று ஏப்ரல் முதலாம் திகதி!**

வாசக நேயர்களே கவனம்!

இன்று ஏப்ரல் முதலாம் திகதி. உங்களை முட்டாளாக்குவதற்கு பலரும் வேண்டாத சங்கதிகளைக் கூறி உங்களைக் குழப்ப முயல்வார்கள். ஆகையால் விழிப்பாகவும், கவனமாகவும் இருக்கவும்.

## நேற்றைய தாக்குதல்களில் 46 பேர் பலி

கொழும்பு, ஏப்.1

முல்லைத்தீவில் மக்கள் பாதுகாப்பு வலயத்துக்குட்பட்ட மாத்தளன், வலைஞர் மடம், அம்பலவன் பொக்கணை ஆகிய இடங்கள் மீது நேற்று மேற்கொள்ளப்பட்ட ஷெல் மற்றும் விமானத்தாக்குதல்களில் 17 சிறுவர்கள் உட்பட 46 பேர் கொல்லப்பட்டனர்; 27 சிறுவர்கள் உட் பட 118 பேர் காயமடைந்தனர் என்று இணையத்தளங்கள் தெரிவித்தன.

இணையத்தளங்கள் இது தொடர்பாக வெளியிட்டுள்ள (02ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு வழங்கும் நிதியுதவிக்கு எதிராக வழக்கு

வாஷிங்ரன், ஏப்.1

இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியத்தினால் 1.9 பில்லியன் டொலர் உதவி வழங்கப்படுவதை ஆட்சேபித்து கொலம்பியா நீதி மன்றத்தில் நேற்றுமுன்தினம் வழக்குத் தாக்கல்செய்யப்பட்டுள்ளது.

தமிழர்கள் படுகொலைக்கெதிரான அமெரிக்கக் குழு, அமெரிக்க திறைசேரிச் செயலாளர் திமுதி கெய்த்னர், சர்வதேச நாணய நிதி

(16 ஆம் பக்கம் பார்க்க)

# திருமலை சிறுமியின் கொலையுடன் தொடர்புடைய மேலும் இரண்டு சந்தேக நபர்கள் சுட்டுக்கொலை!

## புலிகளுடனான மோதலில் பலி என்கின்றது பொலிஸ்

கொழும்பு, ஏப். 1

திருகோணமலை, கன்னியாய்ப் பகுதியில் நேற்று விடுதலைப் புலிகள் எனக் கூறப்படும் குழுவிற்கும் பொலிஸாருக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் திருமலையில் கப்பம் கோரிக் கடத்தப்பட்டு கொல்லப்பட்ட சிறுமியின் கொலை தொடர்பான சந்தேக நபர்கள் இருவர் உயிரிழந்துள்ளனர். மேலும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் கான்ஸ்டபிள் ஒருவரும் படுகாயமடைந்தனர் என்று பொலிஸ் தரப்பில் கூறப்பட்டது.

காயமடைந்தவர்கள் திருகோணமலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

''அரச அதிபர், ஆளுநர் ஆகியோரை கொலை செய்யுமாறு, தற்கொலை அங்கி

(16 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் சேவை இன்று இடம்பெறும்

யாழ்ப்பாணம், ஏப்.1

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை இன்று புதன்கிழமை இடம் பெறும் என்று யாழ்.அரச அதிபர் அறிவித்துள்ளார்.

கப்பலில் பயணம் செய்ய பதிவு செய்தவர்களை இன்று காலை 7 மணிக்கு யாழ். ரயில் நிலையப்பகுதிக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது.

(1)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ருவென்ரி 20 தொடரை வென்றது தென்னாபிரிக்கா

## இரண்டாவது போட்டியிலும் ஆஸி. தோல்வி

செஞ்சூரியன், ஏப்ரல் 01

தென்னாபிரிக்காவுக்கு எதிரான 2ஆவது ருவென்ரி 20 கிரிக்கெட் போட்டியிலும் அவுஸ்திரேலிய அணி தோல்வி கண்டது.

ரிக்கி பொண்டிங் தலைமையிலான அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதலாவது ருவென்ரி 20 கிரிக்கெட் போட்டியில் தோல்வியடைந்த அவுஸ்திரேலிய அணி, மீண்டும் 2ஆவது ருவென்ரி 20 போட்டியில் மோதியது.

நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலியா முதலில் தென்னாபிரிக்காவை துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது. இதன்படி ஆடிய தென்னாபிரிக்க அணி 20 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 156 ஓட்டங்களைச் சேர்த்தது. வான் டெர் மெர்வ் 48 ஓட்டங்களும் (30 பந்து, 2 பவுண்டரி, 4 சிக்ஸர்), ரொபின் பீற்றர்ஸன் 34 ஓட்டங்களும், கிப்ஸ் 20 ஓட்டங்களும் விளாசினர்.

தொடர்ந்து ஆடிய அவுஸ்திரேலிய அணி தென்னாபிரிக்க அணியின் பந்து வீச்சில் ஓட்டம் குவிக்க முடியாமல் தடுமாறியது. 20 ஓவர்களில் அந்த அணியால் 8 விக்கெட்டுக்களை இழந்து 139 ஓட்டங்களையே எடுக்க முடிந்தது. இதனால் 17 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தென்னாபிரிக்க அணி வெற்றி பெற்றது.

அவுஸ்திரேலிய அணியில் அதிகபட்சமாக மைக்கல் கிளார்க், டேவிட் ஹஸி ஆகியோர் தலா 27 ஓட்டங்களை எடுத்தனர். அவுஸ்திரேலியாவை கட்டுப்படுத்துவதில் முக்கிய பங்கு வகித்த தென்னாபிரிக்க அணித் தலைவரும், சுழற்பந்து வீச்சாளருமான ஜோகன் போத்தா 4 ஓவரில் 16 ஓட்டங்களை மாத்திரமே விட்டுக் கொடுத்து 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இந்த வெற்றியின் மூலம் ருவென்ரி 20 போட்டித் தொடரை தென்னாபிரிக்க அணி 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியது. அடுத்து இரு அணிகளுக்கும் இடையிலான 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடர் எதிர்வரும் 3ஆம் திகதி தொடங்குகிறது.




பிரிடோரியாவில் நடந்த அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ருவென்ரி 20 போட்டியில் அந்தரத்தில் பறந்து சிக்ஸர் விளாசுகிறார் தென்னாபிரிக்க வீரர் மெர்வி.


### தவறிவிட்டது

852/19, பருத்தித்துறை வீதி, முத்திரைச்சந்தி என்னும்விலாசமுடைய இராசையா ஜெயசுந்தர சேகர் என்பவரது தேசிய அடையாள அட்டை (563523034V) திருநெல்வேலியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து அடையாள அட்டையில் உள்ள விலாசத்துடன் அல்லது 0774064031 எனும் தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளவும்.


# நேற்றைய தாக்குதல்களில்...

(01ஆம் பக்கத் தொடர்ச்சி)

விவரங்கள் வருமாறு:-

'மக்கள் பாதுகாப்பு வலயப்' பகுதிகளான மாத்தளன், வலைஞர்மடம் மற்றும் அம்பலவன்பொக்கணைப் பகுதிகளில் நேற்று செவ்வாய்க்கிழமை படையினர் அகோர ஷெல், கொத்துக்குண்டு மற்றும் விமானக் குண்டுத்தாக்குதல்களையும் நடத்தியுள்ளனர்.

இத்தாக்குதல்களில் 17 சிறுவர்கள் உட்பட 46 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் இரண்டு கர்ப்பிணிப் பெண்கள், 27 சிறுவர்கள் உட்பட 118 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

எண்ணிக்கையான மக்கள் வலைஞர் மடத்திலும் அம்பலவன்பொக்கணையிலும் மரணமானார்கள். இவர்களில் பலர் கொத்துக்குண்டுகளால் கொலையுண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொல்லப்பட்டவர்களில் அடையாளம் காணப்பட்டோர் விவரம் வருமாறு:

லிங்கேஸ்வரன் தனுசிகா (வயது 02), தங்கா (வயது 03) கணபதிப்பிள்ளை மணிவண்ணன் (வயது 25), ரஜிதரன் தமிழ்ச்செல்வி (வயது 32), குழந்தைவேல் ரவி (வயது 43), பாலச்சந்திரன் சந்திரா (வயது 44), சந்திரஸ்ரீ கமலவேணி (வயது 07), ஜெயராசா ஜெருசலின் (வயது 14), குமரதாஸ் சந்திரா (வயது 33), தேவன் புஸ்பராணி (வயது 54) தர்மன் சேதுமதி (வயது 28) கருணாகரன் தேவி (வயது 38), இராமகிருஸ்ணன் கார்த்திகா (வயது 08), சேதுமாதவன் செந்தூரன் (வயது 12), காசிப்பிள்ளை மதுசா (வயது 14), சேவியர் கண்மணி (வயது 30), மதுரநாயகம் கருவேந்தன் (வயது 15), இலங்கைநாதன் சாருஜன் (வயது 11), தருமராசா மயூரன் (வயது 10), சேந்தன் ஜெகன் (வயது 17), மதுபாலன் விதுசன் (வயது 18), கருணாகரன் பாலேஸ்வரன் (வயது 38), முத்தையா மதுபாலன் (வயது 23), காந்திதாசன் ஈஸ்வரன் (வயது 52), காந்திதீபன் (வயது 13), ரவிராஜ் சேதுமாதவன் (வயது 63), கந்தையா மதுமிதன் (வயது 14), தேவன்மருதன் (வயது 16), ஸ்ரீசீலன் காந்தி (வயது 28), சிவயோகம் பற்றிக் ஞானராஜா (வயது 45), ஜெயதேவன் தேன்மொழி (வயது 30), சுபாஸ்கரன் சுமித்திரா (வயது 03), வேலுசாமி சன்னியாசி (வயது 54), செபமாலை நிர்மதி (வயது 46), அன்ரன் மரியதாஸ் ஜெயபால் (வயது 15), சார்வே சிம்போரா (வயது 14), திருஞானமூர்த்தி யோகராசா (வயது 28), தமிழ்ச்செல்வன் றஜிதா (வயது 10), அன்ரன் மரியதாஸ் மேரிநிரோஜினி (வயது 13), இராசையா பாமினி (வயது 24), அந்தோனி முத்து கீதபொன்கலன் (வயது 69), தம்பிப்பிள்ளை தர்மினி (வயது 03), ரஜனிகாந்த் செல்வி (வயது 32) ஆகியோர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். ஏனையோரின் பெயர்விவரம் கிடைக்கப் பெறவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-1)


### தேவை

அச்சகப் பாவனைக்குரிய பேப்பர் கட்டர்ஒன்று தேவை.

தொடர்பு: 0774598346



# புதுவருட மலிவு விற்பனை!

**RAM (Memory)**

| | |
|---|---|
| Kingston DDR II 512 MB | 1200/- |
| Kingston DDR II 1 GB | 1600/- |
| KIngston DDR II 2 GB | 2600/- |
| KIngston DDR I 512 MB | 2800/- |
| Kingston DDR I 1 GB | 4750/- |

**HARD DISKS**

| | |
|---|---|
| 80 GB SATA | 4600/- |
| 160 GB SATA | 4900/- |
| 250 GB SATA | 5900/- |
| 500 GB SATA | 8250/- |
| 160 GB IDE | 5750/- |

**DVD WRITERS**

| | |
|---|---|
| LG 20X SATA & IDE | 3000/- |
| CD Writter | 2500/- |
| Samsung 20X SATA | 3200/- |

**MONITORS LCD**

| | |
|---|---|
| Bene / Prolink 16" LCD | 12250/- |
| LG 17" LCD | 15500/- |
| View Sonic 17" LCD | 16250/- |
| View Sonic / Bene 19" LCD (Wide Screen & Square) | 17500/- |

**SUBWOOFERS**

| | |
|---|---|
| 2.1 Microlab M 280 | 3600/- |
| 2.1 creative SBS 380 | 3900/- |
| 5.1 Microlab MIIIB | 6500/- |
| 5.1 Creative SBS A500 | 8200/- |

**ACCESSORIES**

| | |
|---|---|
| Power Supply | 1600/- |
| Card Reader | 650/- |
| Optical Mouse | 450/- |
| Modem (56 K) | 700/- |
| Pen Drive Capture Card | 7500/- |
| AGP VGA Card 128 MB | 4250/- |
| PC Express 512 MB | 6500/- |
| Web Camera | 1250/- |

**PRINTER**

| | |
|---|---|
| HP 1560 Colour Inkjet | 4750/- |
| HP 1005 Laserjet | 12900/- |

**MP4, MP5 PLAYERS (Sony/Orange)** 7500/-

* 2 GB (Expand 2GB)
* Camera * FM Radio * MP3
* Games * Voice Recording
* USB Cable * Power Charger
* Head Phone * Driver CD

**Sony MP4 & MP3** 1 GB - 4500/- 2 GB - 5500/-

* FM Radio * Games
* MP3 * MP4 * Head Phone

**PORTABLE HARD DISK**

| | |
|---|---|
| 160 GB USB Power | 9400/- |
| 250 GB USB Power | 10900/- |
| 320 GB USB Power | 13250/- |

**PEN DRIVE**

1 GB - 550/- 2 GB - 850/- 4 GB - 1100/- 8 GB - 1900/- 16 GB - 4500/-

**TRANSCEND DIGITAL VOICE RECORDER**

| 4 GB | 8 GB |
|---|---|
| FM Radio | FM Radio |
| MP3 | MP3 |
| Recording | Recording |
| Head Phone | Head Phone |
| 7900/- | 10900/- |

**MOTHER BOARD**

| | |
|---|---|
| MSI DDR II Intel | 5200/- |
| FoxConn G31 PR | 5250/- |
| Biostar G31 PR | 5500/- |
| Asus P5 GCMX/GBL | 6000/- |
| Intel DG31 PR | 7500/- |
| Longiton 478 intel | 5900/- |

Warranty Valued 1 Year

Stock Available

MUSIC WORLD & COMPUTERS


## வேலணையில் இன்று அபிவிருத்தி செயலமர்வு

யாழ்ப்பாணம், ஏப். 1

தீவக வலயக்கல்வி அலுவலகத்தில் கடமையாற்றும் கல்விப் பணியாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் வளவாளர்களுக்கான கற்பித்தல் திறன் செயலமர்வு இன்று புதன்கிழமை வேலணை ஆசிரிய நிலையத்தில் நடைபெறும்.

இந்தச் செயலமர்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வித்துறை விரிவுரையாளர் கே.கலாமணியும் தேசியகல்வியல் கல்லூரி விரிவுரையாளர் பா.தனபாலனும் வளவாளர்ளாகக் கலந்து கொண்டு கருத்து வழங்கவுள்ளனர். (1-267)

## மண்கும்பானில் மண்டபத்திறப்பு விழா

வேலணை, ஏப்.1

மண்கும்பான் வெள்ளாம் புற்றடி வீரகத்திவிநாயகர் ஆலயத்துடன் இணைந்ததாக நிர்மாணிக்கப்பட்டுள்ள விநாயகர் மணிமண்டபம் எதிர்வரும் 5ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் வேலணை பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

(1-267)


SALE மாபெரும் மலிவு விற்பனை SALE

01.04.2009 - 15.04.2009 வரை

வாடிக்கையாளரின் நலன்கருதி ஈஸ்டர், சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு எங்குமே இல்லாத மாபெரும் மலிவு விற்பனை

* அனைத்து ஆடைகளுக்கும் விசேட விலைக்கழிவு!

தைத்த ஆடைகளுக்கு அதி விசேட விலைக்கழிவு!

உடன்விஜயம் செய்யுங்கள்.

லைடன் புடைவை நிலையம்

இல. 410, ஆஸ்பத்திரி வீதி, (பஸ் நிலையம் முன்பாக) யாழ்ப்பாணம். தொ.பே: 0212222381




## கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவன உரிமையாளரின் அன்புச் சகோதரி

### தசக்கிரீபன் சுபாசினி



அவரின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரது ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மகராசி நகை மாடம், 51, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி



எமது சக முதலாம் வருட விவசாய பீட மாணவி சுதர்ஷினியின் அன்புத் தந்தையார்

### சிவசுப்பிரமணியம் மகேந்திரன்

அவர்கள் 30.03.2009 அன்று காலமான செய்தியறிந்து அவர் தம் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

முதலாம் வருட மாணவர்கள்,
விவசாய பீடம், யாழ்.பல்கலைக்கழகம்.

## மரண அறிவித்தல்

### திருமதி தசக்கிரீபன் சுபாசினி



கொக்குவில் மேற்கு, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், 175, சிவன்பண்ணை வீதி, கொட்டடியை வசிப்பிடமாகவும் வேலணை மேற்கு, 8ஆம் வட்டாரத்தைப் புகுந்த இடமாகவும் கொண்ட திருமதி தசக்கிரீபன் (நக்கீரன்) சுபாசினி நேற்று முன்தினம் (30.03.2009) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராசேந்திரம் மற்றும் தங்கலெட்சுமி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சண்முகநாதன் மற்றும் ஞானப்பூங்கோதை ஆகியோரின் அன்பு மருமகளும், தசக்கிரீபனின் (வேலணை) அன்பு மனைவியும், நிகேதன், கேனுஜன், கபிநயா, நிலக்ஷன், கம்ஷிகா ஆகியோரின் அன்புத் தாயாரும், சுரேஸ்குமார், ஜெயக்குமார், பாலகுமார் (மகராசி நகை மாடம்) லதாசினி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஞானவசந்தி (ஆசிரியை, வவுனியா), சிறிகுகவதனி (ஆசிரியை, வவுனியா), தசவரன் (முகாமையாளர், கமநல சேவை, வவுனியா), யோகேஸ்வரி, கலைரஜனி, சதீஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.04.2009) புதன்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

175, சிவன்பண்ணை வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# அகதிகளின் நடமாடும் சுதந்திரம்

வவுனியாவில் அரசாங்கம் அமைத்துள்ள நலன்புரி நிலையங்களில் - அகதி முகாம்களில் - உள்ள நிலைமைகளை வெளிப்படுத்த அரசாங்கம் விருப்பம் கொண்டிருக்கவில்லை. ஆனால், அங்குள்ள மக்களை சர்வதேச நியமங்களுக்கு ஏற்பக் கவனிக்காவிட்டால், அவர்களின் நலன்கள் பேணப்படாவிட்டால், ஐக்கிய நாடுகள் சபை வழங்கும் நிதியுதவிகளை நிறுத்த நேரிடும் என்று வெளிவந்த அறிவித்தலைத் தொடர்ந்து அரசாங்கம் உசார் அடைந்திருப்பதை அவதானிக்கமுடிகிறது.

வன்னியில் இருந்து- முல்லைத்தீவில் இருந்து- விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து- வரும் மக்களுக்காக அமைக்கப்பட்டுள்ள அகதிமுகாம்கள் சர்வதேச தரத்துடன் இருக்கவேண்டும் என்று இம் மாத மத்தியில் கருத்துத் தெரிவித்திருந்தார் ஐ.நாவின் மனிதாபிமான விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் நாயகம் ஜோன் ஹோம்ஸ்.

அந்த எச்சரிக்கை வந்த பின்னர், அரசாங்கமும் அமைச்சர்களும் அதிகாரிகளும், வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வந்து வவுனியா நலன்புரி நிலையங்களில் அகதிகளாகத் தஞ்சம் அடைந்துள்ள தமிழ்மக்களை தாம் நினைத்தவாறு, தமது மனம்போன போக்கில் பராமரிக்க இயலாது என்று எண்ணி இருக்கவேண்டும்.

அதனால் உள்நாட்டு, வெளிநாட்டு ஊடகவியலாளர்களை ஏற்பாடு செய்யப்பட்ட விஜயத்தில் அழைத்துவந்து, எல்லாம் நல்லனவாகவே, சர்வதேச மட்டத்தில் எதிர்பார்க்கப்படும் விதிமுறைகள் நியமங்களுக்கு ஏற்பவே நடைபெறுகின்றன என்று ''நிறம்பூசி'' க் காட்டப்பட்டது. வெளிநாட்டு ஊடகங்களின் பிரதிநிதிகள் பலரும் தாம் அங்கு சென்றவேளை சீர்ஒழுங்கு செய்யப்பட்டிருந்த நிலைமைகளைப் பார்த்துவிட்டு திருப்திகரமான தகவல்களை வெளியிட்டிருந்தார்கள். அவற்றால் அரசாங்கத் தரப்புகளின் மனங்கள் 'குளிர்ந்த' போதிலும் சிலர் உண்மையான, அங்கு நிலவும் யதார்த்தமான நிலமையை வெளிப்படுத்தாமல் இல்லை.

குறிக்கப்பட்ட சார்பு நிலை அறிக்கைகள், செய்திகளின் மத்தியிலும் மறு பக்கங்களும் திட்டுத் திட்டாக வெளிவந்தன, வந்துகொண்டிருக்கின்றன.

நலன்புரி நிலையங்களைப் பராமரிப்பதற்குத் தேவைப்படும் நிதியைப் பெறுவதற்கு அவை குறித்து மினுமினுக்கும் அறிக்கைகள் தேவை என்பதனை மனித உரிமைகள் அமைச்சரும் அரசாங்கமும் நன்றாகப் புரிந்துகொண்ட நிலையில் -

ஊடகவியலாளர்களை மட்டுமன்றி சர்வதே[illegible] அமைப்புக்களின் நற்சான்றுப் பத்திரங்களையும் பெற்றுக்கொண்டால் தமது பக்கம் நிமிர்வுறும் என்ற 'கணக்கோடு' -

சர்வதேச மனிதாபிமானத் தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் வவுனியா அகதி முகாம்களுக்கு விஜயம் செய்து பார்வையிட அனுமதி வழங்கி வருகிறது.

அந்த வகையில், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் ஐரோப்பிய அலுவலரான எஸ்கோ ஹென்ட்ரஸ் கின்ஸ்கிஜ் வவுனியா நலன்புரி நிலையங்களைப் பார்வையிடுவதற்கு அரசாங்கம் அவருக்கு விசேட அனுமதி வழங்கியிருந்தது.

கின்ஸ்கிஜ் புதுடில்லியில் வெளியிட்டிருக்கும் தகவல் - கருத்து - உண்மை-நிச்சயமாக அரசுக்கு ஓர் 'அதிர்ச்சி வைத்தியம்' என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

வவுனியா அகதிமுகாம்களில் அளவுக்கு அதிகமான எண்ணிக்கையினர் தங்கவைக்கப்பட்டுள்ளனர். சுகாதாரம், சுற்றாடல், நிலைகளில் மோசமான பிரச்சினைகள் காணப்படுகின்றன -

அகதி முகாம்கள் அமைந்துள்ள பகுதிகளில் ஏராளமான இராணுவத்தினர் காணப்படுகின்றனர். இடம்பெயர்ந்த அகதிகள் வெளியேசென்றுவர அனுமதி வழங்கப்படுவதில்லை. சுதந்திரமாக நடமாடுவதற்கான சூழ்நிலையும் காணப்படவில்லை - என்று

இந்தியத் தலைநகர் புதுடில்லியில் வைத்து கின்ஸ் கிஜ் தாம் பார்த்ததை, உண்மையைக் கூறியதைக் கேட்டதும் அரசாங்கத் தரப்பினருக்கு உடன் ஒவ்வாமை (அலர்ஜி) உண்டாகியிருக்கும்.

இன்றோ நாளையோ மறுப்பு அறிக்கையொன்று சாதகமான பிரசார உக்திகளுடன் வெளிவரும் என்று எதிர்பார்க்கலாம். அதுமட்டுமன்றி, ஜோன் ஹோம்ஸ் போலவே இவரும் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் என்று விமல் வீரவன்ச 'ரெடிமேட்' முத்திரை குத்தி விடுவார்!

வன்னியில் உலக உணவுத் திட்டமும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவும் மட்டுமே பணியாற்ற இப்போது அனுமதிக்கப்பட்டிருக்கும் சர்வதேச தொண்டு நிறுவனங்கள் ஆகும். குறிப்பாக அளப்பரிய மனிதாபிமான சேவைகளை ஆற்றிவருகிறது செஞ்சிலுவை- ஐ.சி.ஆர்.சி.

அது தெற்கின் பலரின் கண்களைக் குத்தியிருக்கும். இதோ ஒரு சந்தர்ப்பம் வந்துவிட்டது, விட்டுவைக்கலாகாது, என்று எண்ணிக்கொண்டு - கணக்குப்போட்டு - செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவை வன்னியில் இருந்து வெளியேற்றவேண்டும் என்ற சுலோகம் ஏந்தப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கு இடமில்லை!

அகதி முகாம்கள் அமைந்துள்ள பகுதிகளில் ஏராளமான இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருப்பதும், அகதிகள் வெளியே செல்வதற்கும் சுதந்திரமாக நடமாடுவதற்கான சூழ்நிலையும் இல்லையென்று கின்ஸ்கிஜ் கூறியிருப்பதும் கவனிக்கப்படவேண்டியவை.

மனிதாபிமான அடிப்படை உரிமைகளில் மிகுமுக்கியமானவற்றில், இன்றியமையாதவற்றில் நடமாடும் சுதந்திரமும் ஒன்று. உறவினர்கள் அகதி முகாம்களில் தங்கியிருப்போரை சந்திப்பதற்கு அனுமதித்தால் விடுதலைப் புலிகள் அதனைப் பயன்படுத்தி அங்குசென்று குண்டுத் தாக்கதல் நடத்துவார்கள் என்று அரச தரப்பில் ஒரு காரணம் காட்டப்பட்டது; நியாயம் தெரிவிக்கப்பட்டது. அதேபோன்று அகதிகளின் சுதந்திரமான நடமாட்டத்திற்கான தடைக்கும் அரச தரப்பினர் ஒரு காரணத்தைக் கண்டுபிடித்துக் கூறக்கூடும்; கூறுவர். ஆனால் ஒருவரின் நடமாடும் சுதந் திரம் தடுக்கப்படுவது அவரது அடிப்படையான வாழ்வுரி மையை மறுப்பது என்பதனை கருத்திற்கொண்டு, அரசு தனது நோக்கையும் போக்கையும் மாற்றிக்கொள்ளுமா?

## யாழ். மாணவர்களும் கலந்துகொள்ள வசதியாக
# கிழக்குப் பல்கலைக்கழகத் தகுதி காண் பரீட்சையை ஒரு வாரம் நீடிக்குமாறு அரச அதிபர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஏப்.1

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நடனம், சங்கீதம், நாடகமும் அரங்கியலும், கட்புலக் கலை ஆகிய கற்கை நெறிகளுக்கான தகுதிகாண் பரீட்சையை ஒரு வார காலம் நீடிக்குமாறு யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்தத் தகுதிகாண் பரீட்சைக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்திகளும் தோற்றுவதற்கு வசதியாகவே கிழக்குப் பல்கலைக்கழகத் துணைவேந்தரிடம் அரச அதிபர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

2008 கல்வியாண்டுக்குக் கற்கை நெறிகளுக்கான தகுதிகாண் பரீட்சைக்காக யாழ்.மாவட்டத்திலிருந்து 460 பரீட்சார்த்திகள் அழைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தாம் பரீட்சைக்குச் செல்வதற்கான பாதுகாப்பு அனுமதியை தத்தமது பிரிவுகளில் உள்ள சிவில் நிர்வாக அலுவலகத்தில் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விண்ணப்பதாரிகள் எதிர்வரும் 4 ஆம் 5 ஆம் திகதிகளில் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் தகுதிகாண் பரீட்சைக்குத் தோற்றுவதற்குப் போதிய கால அவகாசம் இல்லை. எனவே யாழ். மாவட்ட மாணவர்களும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஏதுவாகப் பரீட்சையை ஒரு வார காலம் நீடிப்புச் செய்யுமாறு அரச அதிபர் கேட்டுள்ளார். (50)

# அல்லைப்பிட்டி பிலிப்பு நேரியார் ஆலயம் மூன்றரை வருடங்களின் பின் இன்று திறப்பு
## யாழ்.ஆயர் அபிஷேகம் செய்து வைப்பார்

யாழ்ப்பாணம், ஏப்.1

அல்லைப்பிட்டி புனித பிலிப்பு நேரியார் ஆலயம் மூன்றரை ஆண்டுகளுக்குப் பின்னர் மக்களின் வழிபாட்டுக்கென இன்று புதன் கிழமை மீண்டும் திறக்கப்படுகின்றது.

யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அபிஷேகம் செய்து வைத்து முதல் திருப்பலியை ஒப்புக்கொடுப்பார்.

இந்த ஆலயம் 11.08.2006 இல் அல்லைப்பிட்டியில் ஏற்பட்ட யுத்த அனர்த்தத்தினால் பாரிய சேதத்துக்குள் ளாகியது. அதன்போது ஆலயத்தில் தஞ்சமடை[illegible]ருந்த பொதுமக்களில் [illegible] பலியானது[illegible]ன் 95 பேர் காய மடைந்திருந்தனர்.

இந்தச் சம்பவத்தின் பின்னர் அல்லைப்பிட்டி மக்கள் இடம்பெயர்ந்து யாழ்.நகரப் பகுதியில் குடியேறியிருந்தனர். இதனால் புனித பிலிப்பு நேரியார் ஆலயமும் சேதமடைந்த நிலையில் வழிபாடுகள் நடைபெறாமல் மூடப்பட்டிருந்தது.

தற்போது இடம்பெயர்ந்திருந்த மக்களில் ஒரு தொகுதியினர் மீண்டும் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர். இதனையடுத்து சாட்டி அல்லைப்பிட்டிப் பங்குத் தந்தையாகப் பணியாற்றும் அருட்திரு. பிலிப் ஸ்ரனிஸ்லஸ் (அ.ம.தி) அடிகளாரின் முயற்சியினால் கடற்படையினரால் இந்த ஆலயம் புனரமைக்கப்பட்டுள்ளது.

இந்த ஆலயம் இன்று காலை 9.30 மணிக்கு யாழ்.ஆயரினால் அபிசேகம் செய்யப்பட்டு முதல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இந்த நிகழ்வில் குருக்கள், துறவிகள் மற்றும் பலர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த அனர்த்தத்தின்போது இவ்வாலயத்தின் பங்குத் தந்தையாக இருந்து காணாமற்போன அருட்தந்தை ஜிம் பிறவுண் அடிகளாரும் அவரது உதவி யாளர் வெ.விமலதாஸ் ஆகியோரும் இந்தத் திருப்பலியின் போது நினைவு கூரப்படுவார்கள்.

# வலி.வடக்குப் பகுதி மக்களுக்கு அரை நிரந்தர வீடுகள்

வண்ணை, ஏப்.1

இடம்பெயர்ந்து சுனாமி மற்றும் நிஷா புயல் காரணங்களால் குடியிருப்புகளை இழந்து போயுள்ள வலி.வடக்குப் பகுதி மக்களுக்கு கரித்தாஸ்- கியூடெக் நிறுவனம் அரை நிரந்தர வீடுகளை அமைத்து வருகிறது.

தெல்லிப்பழை, பிரதேச் செயலகத்துக்கு உட்பட்ட அளவெட்டி பகுதியில் 20 அரை நிரந்தர வீடுகளை அந்த நிறுவனம் அமைத்து வருகிறது.

அவற்றில் இதுவரை 6 வீடுகள் நிர்மாண வேலைகள் பூர்த்தி அடைந்து பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக நிறுவன வட்டாரங்கள் தெரிவித்தன.

அதேவேளை வலி.வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து கோப்பாய் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட இருபாலை கிழக்கில் வசிக்கும் மக்களுக்கு 18 அரை நிரந்தர வீடுகள் அந்த நிறுவனத்தினால் அமைத்து வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (50-160)

# வாதரவத்தை, அச்சுவேலி பகுதிகளுக்கு குடிதண்ணீர் விநியோகிக்க நடவடிக்கை
## புதிய தண்ணீர்த் தாங்கி அமைக்கப்படுகின்றது

யாழ்ப்பாணம், ஏப்.1

புத்தூர், வாதரவத்தை, அச்சுவேலி பகுதிகளுக்கு குடிதண்ணீர் விநியோகத்தை விஸ்தரிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு

இதற்கென 40 ஆயிரம் லீற்றர் கொள்ளளவுடைய தாங்கி ஒன்று அமைக்கப்பட்டு பூர்த்தியாகும் நிலையில் உள்ளது. இந்த நீர்த் தாங்கி ஊடாக வாதரவத்தை பகுதிக்கான குடிதண்ணீர் குழாய் மூலம் விநியோகிக்கப்படும்.

நிலாவரை கிணற்றுக்கு அருகில் உள்ள நீர்மட்டம் குறையாத நன்னீர் குழாய் கிணறு மூலம் மேற்படி தாங்கிக்கு குடிதண்ணீர் ஏற்றப்பட்டு பின்னர் மக்களுக்கு விநியோகிக்கவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

யுனிசெவ் நிறுவனத்தின் உதவியுடன் இத் தண்ணீர் தாங்கி அமைக்கப்பட்டு வருகிறது என்றார். (50-224)

# புகையிலைக் கன்றுகளில் புதுவித நோய்

யாழ்ப்பாணம், ஏப்.1

கோப்பாய், நீர்வேலிப் பகுதியில் உள்ள தோட்ட நிலங்களில் பயிரிடப்பட்ட புகையிலைக் கன்றுகள் புதுவித நோயினால் பாதிக்கப்பட்டுள்ளன.

அநேகமாக இந்த புகையிலைகள் இலை மடிச்சு மற்றும் புள்ளி நோய்த் தாக்கங்களுக்கு இலக்காகி இருக்கலாம் என நம்பப்படுகிறது.

இந்த நோயைக் கட்டுப்படுத்தும் முகமாக விவசாயிகள் கிருமிநாசனிகளை விசிறி வருகின்றனர்.

கடந்த வாரங்களில் குடாநாட்டின் பல பகுதிகளிலும் மழையினாலேயே இந்த நோய் ஏற்பட்டுள்ளது என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (04-224)

# சின்னம் சூட்டும் நிகழ்வு

கோப்பாய், ஏப்.1

கோப்பாய் தெற்கு றோ.க.த.க. பாடசாலையின் மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 8 மணிக்கு பாடசாலை அதிபர் ச.லலீசன் தலை மையில் இடம்பெறும்.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி கலந்துகொண்டு மாணவர்களுக்குச் சின்னம் சூட்டி மதிப்பளிப்பார். (50-72)

# உருளைக் கிழங்கு அறுவடை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப்.1

யாழ்.குடாநாட்டில் காலம் பிந்தி நடுகை செய்யப்பட்ட உருளைக் கிழங்கின் அறுவடை தற்போது ஆரம்பமாகியுள்ளது.

உருளைக்கிழங்கு அறுவடை ஆரம்பமாகியதையடுத்து சந்தைகளில் அதன் விலையும் வீழ்ச்சியடைந்துள்ளது

திருநெல்வேலி, மருதனார்மடம், சுன்னாகம் போன்ற பிரதான சந்தைகளில் உருளைக்கிழங்குகள் அதிகளவில் வந்து சேர்கின்றன. அத்துடன் அவை கிலோ 50 ரூபாமுதல் 60 ரூபா வரை விற்கப்படுகின்றன. (50-224)

## நாளை

| | |
|---|---|
| பங்குனி 20 | 02.04.2009 வியாழக்கிழமை |
| திதி: | சப்தமி மு.இ.10.27வரை |
| நட்சத்திரம்: | திருவாதிரை மு.இ.10.47 வரை |
| [illegible] | [illegible] |
| ராகுகாலம்: | 01.40 - 03.10 |

# புல்மோட்டை ஆஸ்பத்திரியிலிருந்து 55 நோயாளர்கள் மன்னாருக்கு

மன்னார், ஏப்.1

வன்னியில் இடம்பெற்றுவரும் மோதல் காரணமாக காயமடைந்தவர்களில் மேலும் 55 நோயாளர்கள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை 6.00 மணியளவில் மன்னார் பொது வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். இவர்கள் கப்பல் மூலம் திருமலை புல்மோட்டை வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டவர்களாவர்.

இவர்கள் அனைவரும் 3 அம்புலன்ஸ்கள் மற்றும் தனியார் வாகனம் ஒன்று ஆகியவற்றின் மூலம் பொலிஸ் பாதுகாப்புடன் அழைத்து செல்லப்பட்டனர். இது வரையில் வன்னியில் இடம்பெற்ற மோதல் காரணமாக மேலதிக சிகிச்சைகளுக்காக 2 ஆயிரத்து 300 நோயாளர்கள் வரை மன்னார் பொது வைத்திய சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation, noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவன உயர் தேசிய வியாபாரக் கற்கை நெறி துறைத்தலைவர் (HNDBS) சு.விஜயநாதன் அவர்களின் பாசமிகு தந்தையார்

**வல்லிபுரம் சுவாமிநாதன்**

அவர்கள் வவுனியாவில் இறைபதம் அடைந்தமையையிட்டு அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

யாழ்.உயர் தொழில்நுட்பவியல் நிறுவன சமூகம்.


## மரண அறிவித்தல்கள்

### திருமதி பாக்கியம் தம்பிஜயா



சாவகச்சேரி, கோவிற்குடியிருப்பைச் சேர்ந்த திருமதி பாக்கியம் தம்பிஜயா நேற்று (31.03.2009) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிஜயாவின் அன்பு மனைவியும் தனலட்சுமி - துரைராசா, பாக்கியலட்சுமி- நவரத்தினம், சோதீஸ்வரி- நடராசா (ஓய்வுபெற்ற ஆசிரியை), செல்வநிதி - பரமநாதன், யோகராணி (கனடா), நேசமலர் - தம்பையா (இந்தியா), ஸ்ரீமுகநிமலன் (ஜேர்மனி), அமரர் இரத்தினமலர் மற்றும் நவமலர் - யோகேஸ்வரன் (அமெரிக்கா), ஸ்ரீகுகதாசன்(கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும் அமரர் தவமணி- தியாகராசா மற்றும் இராசமணி- நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.04.2009) முற்பகல் 10 மணிக்கு இடம்பெற்று சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

2ஆம் குறுக்குத் தெரு,
கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

தகவல்:
ப.குகன் (பேரன்)
அஞ்சலகம், சாவகச்சேரி.

### செபஸ்ரி ஆசீர்வாதம் (செல்வம்)

(இளைப்பாறிய ஊழியர், யாழ். போதனா வைத்தியசாலை)



21, மத்தியூஸ்வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செபஸ்ரி ஆசீர்வாதம் நேற்று (31.03.2009) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செபஸ்ரி - மேரிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் செபமாலையம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற ஞானம்மா (முத்து) மற்றும் பாக்கியம் காலஞ்சென்ற மரியம்மா மற்றும் மரியதாஸன் (துரைஜயா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் அமலகுமார் (பாரெயின்), சாள்ஸ்(பிரான்ஸ்), அன்ரன்குமார் (பிரான்ஸ்), அரியமலர், ஞானமலர் (லண்டன்), யூட் (லண்டன்), ஆகியோரின் பாசமிகு தந்தையும் ராணி (பாரெயின்), ராசமணி (பிரான்ஸ்), மாலினி (பிரான்ஸ்), தேவராஜா (யாழ். போதனா வைத்தியசாலை), ஜோண்சன் (லண்டன்), கிறிஸ்ரினா (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (01.04.2009) புதன்கிழமை பி.ப. 3 மணியளவில் தூய மரியன்னை பேராலயத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்டு இரங்கல் திருப்பலியைத் தொடர்ந்து தூய கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

21, மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
மனைவி, மருமகன்.

### சீவரத்தினம் வரதராசா



மண்டைதீவு 5ஆம் வட்டாரத்தை நிரந்தர முகவரியாகவும் இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவிலை வதிவிடமாகவும் கொண்ட சீவரத்தினம் வரதராசா நேற்று (31.03.2009) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீவரத்தினம்-செல்லக்கண்டு தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - அன்னம்மா தம்பதியினரின் மருமகனும் விமலாதேவியின் அன்புக் கணவரும் றமேசன், துஷ்யந்தன், கௌசிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற இரத்தினமலர் மற்றும் வரதலிங்கத்தின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான இராசலிங்கம், அருணகிரி, புனிதவதி, புண்ணியகாந்தன் மற்றும் கணேசலிங்கம் , திலகவதி, நடேசலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.04.2009) புதன்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் ஆலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

5ஆம் வட்டாரம்,
மண்டைதீவு.

தகவல்:
குடும்பத்தினர்
வன்னியசிங்கம் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

## தொடர்பாடல் குறித்து கலந்துரையாடல்

வண்ணை, ஏப்.1

இளைஞர், யுவதிகளுக்கான வன்முறை அற்ற தொடர்பாடல் சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்றை எதிர் வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை த[illegible]கப் பகுதிகளில் இரு இடங்களில் சமாதான நல்லிணக்க பணியகம் நடத்த ஒழுங்குகள் மேற்கொண்டிருப்பதாக பொறுப்பாசிரியை செல்வி க.நிரஞ்சினி தெரிவித்தார்.

இதன்படி அன்றையதினம் முற்பகல் 9.30 மணி தொடக்கம் 11 மணிவரை அல்லைப்பிட்டி, புனித பிலிப்புநேரியார் ஆலய வளாகத்தில் முதல் நிகழ்வு இடம்பெறும்.

இரண்டாவது கலந்துரையாடல் மு.ப. 11.30 மணியில் இருந்து பி.ப. 1.30 மணி வரை நாரந்தனை, புனித தோமையார் தேவாலய வளாகத்தில் நடைபெறுமென்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

(1-160)

## வயலின் வித்துவான் வி.கே.குமாரசாமி காலமானார்

கோப்பாய், ஏப்.1

ஈழத்தில் பிரபல வயலின் வித்துவானாக விளங்கிய இசைப்பேரறிஞர் வி.கே.குமாரசாமி கடந்த ஞாயிற்றுக்கிழமை நீர்கொழும்பில் காலமானார்.

இராமநாதன் நுண்கலைத்துறையின் முன்னாள் விரிவுரையாளராக விளங்கிய இவர் புகழ்பெற்ற இசைக்கலைஞர்களான மதுரை சோமு, மகாராஜபுரம் சந்தானம் ஆகியோரின் இசைக் கச்சேரியில் வயலின் வித்துவானாக கலந்து இலங்கைக்கு பெருமை தேடித்தந்தவர். அகில இலங்கை கம்பன் கழகம், 1994 ஆம் ஆண்டு, இசைப் பேரறிஞர் விருது வழங்கி மதிப்பளித்திருந்தது. அமரர் குமாரசாமியின் இறுதிக் கிரியைகள் கடந்த திங்கட்கிழமை நீர்கொழும்பில் நடைபெற்றன. (1-72)

## மேலும் 194 பேர் யாழ். அழைத்து வரப்பட்டனர்

யாழ்ப்பாணம், ஏப்.1

முல்லைத்தீவுப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த 75 குடும்பங்களைச் சேர்ந்த 194 பேர் அழைத்து வரப்பட்டனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை 47 குடும்பங்களைச் சேர்ந்த 123 பேரும் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை 28 குடும்பங்களைச் சேர்ந்த 71 பேரும் அழைத்து வரப்பட்டனர்.

இவர்கள் கைதடி ஆயுர்வேத மாணவர் விடுதி நலன்புரி நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

### சமாதானக் கல்விச் செயற்பாடுகள்

சீப்பியார் எனும் சமாதான நல்லிணக்க பணியகத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் கிராம மட்டச் சிறார்களுக்கான சமாதானக் கல்விச் செயற்பாடுகள் எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தில் நடைபெறுமென சீப்பியார் செயற்றிட்ட இணைப்பாளர் செல்வி யோ. சோபனா தெரிவித்தார்.

மேலும் அவ்வாறான நிகழ்வொன்று 6 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு நாவற்குழி, அற்புத அன்னை சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறும் என்றும் அவர் மேலும் கூறினார்.


யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

**வருடாந்த பொதுக்கூட்டம்**

தலைவர்: திருமதி.சிவமலர் அனந்தசயனன்
இடம்: துரையப்பா மண்டபம்
காலம்: 12.04.2009 ஞாயிற்றுக்கிழமை
முற்பகல் 9.30 மணி

மேற்படி பொதுக்கூட்டத்திற்கு பெற்றோர், நலன் விரும்பிகள் சகலரும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம். தலைவர்.



**Medecins Sans Frontieres (MSF) France**

MSF is an International independent humanitarian medical aid agency committed to provide medical aid wherever needed, regardless of race, religion, politics or sex.

**VACANCY**

**POSITION: Medical Translator (Female)**

We are looking a skilled, energetic and dynamic person to suit the above position to our office in Point Pedro. The Medical Translator will work with the medical team in the project of hospitals.

**Skills required:**

- Excellent communication skill in English.
- Good interpersonal skill.
- Previous working experience in Medical activities would be an advantageous.

Please forward your CV along with contact phone numbers to the following address before 10th April 2009.

*Project Coordinator*
*Medecins Sans Frontieres (MSF) — France*
*Manthikai,*
*Point Pedro.*


## மரண அறிவித்தல்

### செல்லத்துரை அம்பிகைபாலன்



தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை அம்பிகைபாலன் 27.03.2009 வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் இந்திராதேவி, ஜெகதாம்பிகை ஆகியோரின் அன்புக் கணவரும், ஜெயந்தி, சுரேஸ்குமார், சசீந்திரன், சசிகலா (கனடா) காலஞ்சென்றவர்களான ஜெயசீலன், ஜெயசுதா ஆகியோரின் அன்புத் தந்தையும், பரமேஸ்வரன், பாஸ்கரன் (கனடா), ஜெயரூபி, உஷாநந்தினி, விக்னேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சஜீவன், சாகித்தியா, கஜானி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.04.2009) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 11, கன்னாரலேன்,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்: மகன்மார்,
அ.சுரேஸ்குமார், அ.சசீந்திரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச்சாலைக் காட்சிகள்



நெடுந்தீவு மேற்கு சைவப்பிரகாச வித்தியால விளையாட்டுப் போட்டிகளின் போது யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் வித்தியாலய அதிபர் ச.சத்தியவரதன் ஆகியோர் கொடியேற்றி வைத்தபோது எடுக்கப்பட்ட படம். *(படம்:லக்ஷ்மன்)*



புத்தூர் சோமஸ்கந்த வித்தியாலய மாணவர்கள் அண்மையில் கல்விச் சுற்றுலா ஒன்றினை மேற்கொண்டனர்.அவர்கள் உதயன் பணிமனைக்கு வருகைதந்தபோது எடுக்கப்பட்ட படம். (படம்:ஓங்காரன்)




வலிகாமம் கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவினரால் நடத்தப்பட்ட பெற்றோர், பிள்ளைகளுக்கான கல்வி விழிப்புணர்வுச் செயற்றிட்டச் செயலமர்வு சுன்னாகம் கண்ணகி நலன்புரி நிலையத்தில் அண்மையில் நடத்தப்பட்டது.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட உடுவில் பிரதேச செயலர் திருமதி ம.சதீஸன் உரையாற்றுவதையும் செயற்றிட்ட அலுவலர் ந.சண்முகராஜா, வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ச.நாகராஜா, வாழ்வக நிறுவனத் தலைவர் ஆ.ரவீந்திரன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.



சாரணர்களுக்கான வருடாந்த பாசறை விழாவும் குருளைச் சாரணர்களுக்கான வெளிக்களப் பயிற்சியும் அண்மையில் யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படம்.

# நலன்புரி முகாம்களிலுள்ள மாணவருக்கு இலவசப் பாடநூல்கள் விநியோகம்

யாழ்ப்பாணம்,ஏப்.1

இடம்பெயர்ந்தோர் நலன்புரி முகாம்களில் தங்கியிருக்கும் மாணவர்களுக்கான இலவசப் பாடநூல்களை யாழ். கல்வித் திணைக்களம் விநியோகித்து வருகின்றது.

தரம் ஒன்று முதல் தரம் ஐந்து வரையான வகுப்புககளில்கல்வி கற்கும் மாணவர்களுக்கு இந்தப் பாடநூல்கள் விநியோகிக்கப்பட்டு வருவதாக திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதனைவிட இந்த மாணவர்களுக்கு இலவச சீருடைத் துணிகளும் இவ்வாரத்தில் விநியோகிக்கப்படவுள்ளன. (50-224)

# உப அஞ்சல் அலுவலகம் சிறுப்பிட்டியில் திறந்து வைப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.1

சிறுப்பிட்டிப் பகுதியில் புதிதாக உப அஞ்சல் அலுவலகம் ஒன்று வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய அஞ்சல் அலுவலகத்தை வடமாகாணப் பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் வி.குமரகுரு சம்பிரதாயபூர்வமாக திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் எஸ்.ஜெபரெட்ணம், பிராந்திய நிர்வாக உத்தியோகத்தர் கே.புஸ்பநாதன் உட்பட மற்றும் பல தபாலக அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் உப அஞ்சல் அலுவலகத்தின் சேவைகளும் உடனடியாக ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இதில் பாடசாலை மாணவர்களின் சேமிப்புக் கணக்குகள் மற்றும் நிலையான வைப்புகள், மின்விநியோக பட்டியலுக்கான கொடுப்பனவு சேவைகள் என்பனவும் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

(50-224)

# மாணவர்களின் வரவை ஒழுங்கமைக்க பாடசாலைகளில் கட்டாயக் கல்விக் குழு

கோப்பாய்,ஏப்.1

பாடசாலைகளில் இவ்வாண்டு மாணவர்களின் வரவை ஊக்கப்படுத்துவதற்கும், வரவு ஒழுங்கைப் பேணவும் கட்டாயக்கல்வி வரவுக்குழு அமைக்கப்படவுள்ளது.

இதனடிப்படையில் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் பாடசாலைகளில் கட்டாயக்கல்விக் குழு அமைக்கப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்குழுவில் பாடசாலை அதிபர், உப அதிபர் அல்லது பகுதித் தலைவர், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர், பழைய மாணவர் சங்க உறுப்பினர், கிராம அலுவலர், சமுர்த்தி அலுவலர், மதகுரு, நலன் விரும்பிகள் ஆகியோர்கள் உள்ளடக்கப்படுவர்.

இக்குழுவினர் 5 வயது முதல் 14 வயது வரையான பாடசாலை செல்லாத பிள்ளைகளையும், பாடசாலையில் இருந்து இடைவிலகிய பிள்ளைகளையும், வரவு ஒழுங்கீனமாக உள்ள மாணவர்களையும் இனங்கண்டு அவர்கள் பாடசாலையில் கல்வியை தொடர நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பாடசாலையில் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் மாணவர்களை இடைவிலகாமல் கவனிப்பதிலும் இந்தக் குழுவினர் ஈடுபடுவார்கள். (50-72)

# நலன்புரி நிலையங்களில் நடமாடும் மருத்துவ சேவை!

வண்ணை,ஏப்.1

கைதடி சித்த ஆயுள்வேத வைத்தியசாலையைச் சேர்ந்த நடமாடும் மருத்துவக் குழுவினர், வன்னியில் இருந்துவந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளோருக்கு வாரந்தோறும் வைத்திய பரிசேதனைகளை நடத்தி அதற்குரிய மருந்துகளையும் வழங்கி வருகின்றனர்.

காய்ச்சல், சளி, வாதம் மற்றும் சரும நோய்களுக்கு இந்த நடமாடும் மருத்துவக் குழுவினர் இதுவரை நூற்றுக் கணக்கானோருக்கு வைத்திய சேவையைச் செய்துள்ளனர்.

ஒவ்வொரு செவ்வாய்க்கிழமைகளிலும் கைதடி, இந்து சமயப் பேரவை சைவச் சிறார் இல்லத்தில் தங்கியுள்ளவர்களுக்கும் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் கைதடி, சித்த மருத்துவத்துறை மாணவர் விடுதி மற்றும் அசெம்பிளி ஒவ்கோட் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டிக்கும் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளோருக்கும் நடமாடும் சித்த மருத்துவக் குழுவினர் சென்று நோயாளர்களைப் பரிசோதித்து மருந்துகள் வழங்கி வருவது குறிப் பிடத்தக்கது.

(04-160)

# தவக்காலச் சிந்தனை



## ஒடுக்கமான பாதையில் சென்று எம் இலக்கை (இறைவனை) அடையப் போகிறோமா? அல்லது...

தவக்காலம் என்பது மன்னிப்பின் காலம். மனமாற்றத்தின் காலம் என்று கூறப்படுவதுண்டு. பொதுவாகத் தவக்காலம் என்பது திசைமாறிச் செல்லும் எம் வாழ்வை சீர் தூக்கிப் பார்த்து எம்மை நாமே எடை போட்டுக் கொள்ளும் காலம். அதாவது தவக்காலமானது தான் தோன்றித்தனமான எம் வாழ்விற்கு ஒரு தண்டவாளம் போன்றது. அதாவது ஒரு ரயிலானது தனது பாதையை (தண்டவாளம்) விட்டு விலகினால் விபத்தைச் சந்திப்பது நிச்சயம். அது தன்னுடைய ஒடுக்கமான பாதையை விட்டு விலகாமல் தொடர்ந்து பயணித்தாலேயே அது குறிப்பிட்ட பயண இலக்கை அடைய முடியும். அதுபோலத்தான் எமக்கும் தவக்காலமானது ஒடுக்கமானது. ஆனால் சரியான பாதையைக் காட்டும் காலமாகும். திசைமாறிச் செல்லும் எம் வாழ்வைத் தூக்கி நிறுத்தி இறைவனை நோக்கிய சரியான பாதைகளில் எம்மை அழைத்துச் செல்லும் காலம்.

ஆகவே இத்தவக்காலத்திலே அலைந்து கொண்டிருக்கும் எம் வாழ்வைத் தகர்த்தெறிந்து மன்னிப்பு, விட்டுக்கொடுப்பு, பிறரன்பு போன்ற பண்புகளால் எம்மை அலங்கரித்த ஒடுக்கமான, உண்மைப் பாதையை தேர்ந்தெடுப்போம். அதுவே நாம் இறைவனை அடையும் சரியான வழி. ஆகவே எவ்வாறு ஒரு ரயிலானது தனது சரியான பாதையைத் தொடர்ந்து பயணித்துத் தன் இலக்கை அடைகிறதோ அதுபோல நாமும் இத்தவக்காலத்திலே இறைவனை அடையும் சரியான வழியை தேர்ந்தெடுத்து இறைவனை நோக்கிய எம் பயணயத்தை ஆரம்பித்து தொடர்ந்து பயணிப்போம்.

*"இடுக்கமான வாயிலின் வழியே நுழையுங்கள். ஏனெனில் அழிவுக்குச் செல்லும் வாயில் அகன்றது. வழியும் விரிவானது. அதன் வழியே செல்வோர் பலர். வாழ்வுக்குச் செல்லும் வாயில் மிகவும் இடுக்கமானது. வழியும் மிகக் குறுகலானது. இதைக் கண்டு பிடி';போர் சிலரே''. (மத் 7:13-14)*

**தோமஸ் ரேகா**
நாவாந்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் இரத்தினம் புனிதராஜா**

(செல்வராஜா)

(சன்ரைஸ் ரேடர்ஸ்,சாவகச்சேரி)

தோற்றம்: 02.06.1961
மறைவு: 23.03.1999
திதி: சஷ்டி (01.04.2009)

காற்றோடு கலந்து ஆண்டு 10 ஆனதுவே
கண்ணீரில் கலந்து நாம் மண்ணில் புலம்புகிறோம்
எம்மோடு உரையாட மீண்டும் நீர் வாராயோ

மீசாலை கிழக்கு,
மீசாலை.

என்றும் உங்கள் நினைவுடன்:
குடும்பத்தினர்.

(83959)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 17.01.1943 மறைவு 02.03.2009

**அமரர் மார்க்கண்டு பெருமாள்**

கடந்த 02.03.2009 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்ப விளக்கின் இறுதிப் பயணத்தில் கலந்துகொண்டோருக்கும், தொலைபேசி, தந்தி மூலம் ஆறுதல் கூறியோருக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டோருக்கும், பல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும் எமது உளமார்ந்த நன்றிகள். இன்று (01.04.2009) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் குடும்ப சகிதம் கலந்துகொள்ளும் வண்ணம் அன்போடு அழைக்கின்றோம்.

பாடசாலை வீதி, பூவத்தோட்டம்,
இமையாணன்.

என்றும் உங்கள் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

## வீதி அமைப்பதற்கு நடவடிக்கை

வடமராட்சி,ஏப்.1

பருத்தித்துறை நகரில் புதிதாக 'நெக்டெப்' நிறுவனத்தின் நிதி உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டு வரும் நவீன சந்தையைச் சுற்றி வீதி அமைக்கப்படவுள்ளது.

இவ்வீதி அமைப்பிற்கான நிதியை வழங்க 'நெக்டெப்' நிறுவனம் முன்வந்துள்ளது.

இவ்வீதி அமைப்புத் தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை தொழில்நுட்ப அலுவலரின் ஆலோசனை பெறப்படவுள்ளது. இந்த ஆலோசனை தொடர்பாக பருத்தித்துறை நகரசபை கலந்துரையாடல் ஒன்றை விரைவில் ஏற்படுத்தவுள்ளது. (50-236)

## கோழிக்குஞ்சு விநியோகம்

கோப்பாய் கால்நடை மருத்துவப் பணிமனையில், முட்டையிடும் பருவத்தில் உள்ள காடைக் கோழிக் குஞ்சுகள், ஒருநாள் வயதுடைய நல்லின கோழிக் குஞ்சுகள் விநியோகிக்கப்படவுள்ளன.

இவற்றினைப் பெறுவதற்குப் பண்ணையாளர்கள்,வளர்ப்பாளர்கள் உடனடியாகப் பணிமனையில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கால்நடை மருத்துவ அதிகாரி கேட்டுள்ளார். (04-22)

# THE DANISH REFUGEE COUNCIL (DRC) in Sri Lanka

DANISH REFUGEE COUNCIL

## Vacancy

### Protection Field Officer (one post) – Jaffna

The Protection Field Officer will work as a member of the Jaffna district team under the leadership of the District Coordinator with support from the country Protection Team. He/ She will play a proactive role in protection monitoring and response, human rights awareness raising / training, and community-level psychosocial activities.

The position is in Jaffna and is field based.

**Closing Date: 16 April 2009**

**Qualifications:**

- University Degree in Social Work / Social Science / Sociology / Psychology / Law + one year of relevant experience; or A Levels + 3 years relevant experience;
- Knowledge of Human Rights principles;
- Experience of community mobilisation and approaches to psychosocial support in the community
- Knowledge of Government structures;
- Confidence and ability to liaise with Government, UN Agencies, NGOs and Communities;
- Flexibility, enthusiasm and a creative approach;
- Advocacy skills;
- Training skills;
- Computer skills in MS Office (Word, Excel, PowerPoint)
- Ability to organize training and awareness raising events;
- Excellent oral and written communication skills in English and local languages are essential requirement;

The position offers an attractive remuneration package. The appointment will initially be for a period of one year with potential for renewal. Female candidates are especially encouraged to apply. Please forward your Curriculum Vitae together with contact telephone number and names of three non-related referees to:

Administrative Officer
Danish Refugee Council
456, Main Street
Chundikuli
Jaffna
Fax No: 021 222 7986

(c/557719)

***Candidates that do not meet the listed qualifications will not be considered.***

# மணிவதனன், ஜெயச்சித்திரா சகோதரர்களின் 14ஆம் ஆண்டு நினைவஞ்சலி





23.10.1975 ⟵ மலர்வு ⟶ 23.04.1977
18.02.1995 ⟵ மறைவு ⟶ 01.04.1995

அன்புச் செல்வங்களே! உங்கள் பிறப்பால் பெருமை கொண்டு பேரானந்தமடைந்த பெற்றோரும், சகோதரர்களும், பாடசாலை மாணவ, மாணவியரும், கல்லூரிச் சமூகமும், ஆசிரியர் குழாமும், நண்பர்களும் உங்கள் மறைவால் பதினான்கு ஆண்டுகள் சோகத்தின் வேகத்தால் பெருந்தணலில் புழுவாய்த் துடிக்கின்றோம்.

தங்கையின் கொடுநோய் கண்டு அவள் தரணியில் வாழ மாட்டாள் எனக் கண்டு மண்ணுலகில் நாம் தவிக்க, நீவிர் விண்ணுலகம் சென்றீரோ? கண்மணியே மத்தியின் மணிவிளக்கே! மணிவதனா! மங்காத குலவிளக்கே ஜெயச்சித்திரா! நீங்கள் எமைப் பிரிந்து பதினான்காண்டுகளில் தந்தையோ தாளாத சோகத்தில். தாயோ மீளாத கண்ணீரில், சகோதர்கள் தீராத சோகத்தில். எம் செல்வங்களே விளையாட்டுத்துறையில் நீங்கள் பெற்றுத்தந்த வெற்றிகளும், விருதுகளும், தங்கப்பதக்கங்களும் என்றும் உங்கள் பெயர் செல்லும்.....

**குடும்பத்தினர்.**

குறிப்பு: இவர்களது ஞாபகார்த்தமாக நடைபெற்ற கரம், மேசைப்பந்து விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் வழங்கப்படும். இப்பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக உயர் திரு.எஸ். ஓங்கார மூர்த்தி - அதிபர் யாழ்.மத்திய கல்லூரி அவர்கள் கலந்து கொள்வார். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

★14 ஆண்டுகளாக சோகத்தில் வாழும் இவர்களின் சோகத்தில் நாமும் பங்குகொள்வோம்.

★ பவானி விலாஸ், கச்சான் அல்வா - கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.
★ சன்லைற் றைக்கிளீனர்ஸ் - 23, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
★ இராஜேஸ்வரி ரெக்ஸ் ரைல்ஸ் - 105, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
★ ஸ்ரீகாந் ஸ்ரோர்ஸ் அன் குறோசறீஸ் - 161, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.: 2219
★ ரதி பென்னி ஹவுஸ் - 53,-ம.ந.உட்புறம், யாழ்ப்பாணம்.
★ லிங்கன் கிறீம் ஹவுஸ் - கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(83973)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அவனியில் உதயம்
04 . 01 . 1926



அரண்டியில் ஐக்கியம்
10 . 04 . 2008

## திருமதி சரஸ்வதி நவரத்தினக் குருக்கள்

(01.04.2009)

அன்பு, அறிவு, பண்பு, பரிவு
பாசம், நேசம், உயிர் மூச்சு
ஆராவமுதும் அணையா விளக்கு
என்றும் இன்றும் இவ்வுலகில்
என்னென்ன சொல் வளம் உண்டோ
அத்தனையும் தானாகி
நீக்கமற நிறைந்த திருவுருவாகி
இலக்கணமே கூறமுடியாத
ஈடிணையில்லா சோதியின் சொத்த
உருவே எங்கள் அம்மா!
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறைந்து ஓராண்டானது அம்மா!
எம் இதயத்துள் தானுறைந்து
சொர்க்கமே எங்கள் வீடாய்
நித்தமும் மகிழ்ந்து வாழ
எந்தையுடன் சேர்ந்தே ஆசிகூறும்
அன்புத் தெய்வமே அம்மா!
எங்கள் உயிரது உள்ள மட்டும்
உள்ளத்தில் உமை என்றும் ஏத்துகின்றோம்.

தகவல்: ந.அல்லமதேவன் (அவுஸ்திரேலியா).
...ப் கிழக்கு, உரும்பிராய்.

என்றும் உங்கள் நினைவுடன்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரர், பூட்டர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலன்புரி நிலையங்களிலுள்ள மாணவர்களும் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்ற ஏற்பாடு

## கல்வித் திணைக்களம் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.1

இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மாணவர்களில் 79 பேர் இந்த ஆண்டு நடைபெறவுள்ள 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இவர்கள் தொடர்பான தகவல்கள் அண்மையில் கல்வித் திணைக்களத்தினால் திரட்டப்பட்டன.

மிருசுவில் நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள 42 மாணவர்களும், கைதடி சித்த மருத்துவத்துறை வளாகத்தில் தங்கியுள்ள 18 மாணவர்களும், கைதடி சைவச் சிறுவர் இல்லத்தில் தங்கியுள்ள 19 மாணவர்களும் 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர்.

மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் தலைமையில் நலன்புரி நிலையங்களுக்கு நேரில் சென்ற குழுவினர் மாணவர்களின் விவரங்களைத் திரட்டியதுடன் மாணவர்கள் பரீட்சைக்குத் விண்ணப்பிப்பதற்கான படிவங்களையும் வழங்கியுள்ளனர்.

இதனால் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள தரம் 5 மாணவர்கள் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

(50-224-9)

# பற்றாக்குறைகளால் தள்ளாடும் கைதடி முதியோர் இல்லம்!

வண்ணை,ஏப்.1

கைதடி, அரச முதியோர் இல்லத்தில் ஆண்களும் பெண்களுமாக 184 முதியவர்கள் தங்கவைக்கப்பட்டுள்ளதாகவும் இவர்களைச் சரிவரப் பராமரிப்பதற்கு முதியோர் இல்லத்துக்கு ஆள்பற்றாக்குறை நிலவிவருவதாகவும் முதியோர் இல்லப் பொறுப்பதிகாரி என்.இராஜலிங்கம் தெரிவித்தார்.

முதியோர் இல்லத்தில் தங்கியுள்ளவர்களில் ஆண்கள் 100 பேரும், பெண்கள் 84 பேரும் அடங்குவர்.

அதேவேளை, முதியோர் இல்லத்திற்குப் பாதுகாப்புச் சுவர்கள் சீரின்மையால் கட்டாக்காலி நாய்கள் மற்றும் ஆடு, மாடுகள் நுழைந்து இல்லத்தின் வலைகளை நாசப்படுத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் கடந்தகால அனர்த்தங்களால் மூன்று விடுதிகளும் சேதமடைந்துள்ளன. அதேவேளை புதிதாக ஆண்களுக்கான விடுதி ஒன்று, 75 சதவீதம் முடிவடைந்த நிலையில், பூர்த்திசெய்யாமல் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் பொறுப்பதிகாரி குறிப்பிட்டார். சுகாதாரத் திணைக்களத்தால் சுற்றாடல்களைச் சுத்திகரிப்பதற்கான 'லைசோல்' தொற்றுநீக்கி மருந்தும் இந்த வருடம் இதுவரையில் அனுப்பிவைக்கப்படவில்லை.

சாவகச்சேரி, பொதுச்சுகாதார அதிகாரியால் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு லீற்றர் என்ற அடிப்படையில் 'லைசோல்' தொற்றுநீக்கி வழங்கப்பட்டு வந்தது.

அது கிடைக்காமல் போன பின்னர் 'ஷெவலோன்' மருந்தையே அரச நிதியில் வர்த்தக நிலையங்களில் வாங்கிப் பாவிக்க வேண்டியுள்ளதென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(160)

# தாய்மொழியில் கல்வி போதிக்கும் முறையை நடைமுறைப்படுத்தியவர் ஹண்டி பேரின்பநாயகம்

## அவரது நினைவுதின உரையில் தெரிவிப்பு

நல்லூர்,ஏப்.1

தாய்மொழி மூலம் கல்வி போதிக்க வேண்டும் என்ற கருத்தை முன்வைத்தமைக்காக இலங்கை ஆசிரியர் சங்கத் தலைமைப் பதவியை இழக்க நேரிட்ட போதும் வடமாகாண ஆசிரியர் சங்கத்தினூடாக மீண்டும் அதை முன்னெடுத்து அரசாங்கத்தால் அதை நடைமுறைப்படுத்த முதன்மையாக விளங்கியவர் ஹண்டி பேரின்பநாயகம்.

இலங்கை ஆசிரியர் சங்கத்தைச் சேர்ந்த எஸ்.தியாகலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

ஹண்டி பேரின்பநாயகம் நினைவு தினத்தை முன்னிட்டு அகவிழி காரியாலயத்தில் ஏ.சி.ஜோர்ஜ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தியாகலிங்கம் மேலும் பேசும்போது கூறியதாவது:

கல்வி, அரசியல், சமூகம் தொடர்பில் இவரால் முன்வைக்கப்பட்ட செயற்பாடுகள் தற்காலிக பின்னடைவைச் சந்தித்தாலும் அவைகள் குறிப்பிட்ட காலகட்டத்தின் தேவை என்பதில் இரண்டாவது கருத்து இருக்கமுடியாது.

யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸ் என்ற பெயரில் 1920இல் உருவாகிப் பின்னர் யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் என்ற பெயரைப் பெற்றது.

இதனைப் பார்க்கும்போது ஒரு பிராந்திய மக்களின் தேவையை மட்டும் முன்னெடுத்த அமைப்பாகத் தோன்றிலும் உண்மை அதுவல்ல.

தனது மாநாடுகளின் மூலம் தென்பகுதி அறிஞர்களையும் இந்த அமைப்பு யாழ்ப்பாண மக்களுக்கு அறிமுகம் செய்துள்ளது.


இலங்கையின் நவீன அரசியல் வரலாற்றுப் பின்னணியை புரியாமல் இந்த அமைப்பின் இருப்பையும் அதன் முடிவையும் உய்த்துணருவது கடினம் எனக் கருதுகின்றோம்.

தன்னுடைய இலட்சியப் பயணத்தை வடமாகாண ஆசிரியர் சங்கம் என்ற அமைப்பின் மூலம் மேற்கொண்ட அவர் ஒரு காந்தியவாதியாகவே செயற்பட்டார்.

இலங்கையின் சுதந்திரத்திற்காக உழைக்கும் அமைப்புகளின் முன்னோடியாக இந்த அமைப்பை மதிப்பீடு செய்யமுடியும் - என்றார்.

(203-111)

# தனியார் களஞ்சியத்தில் தீ விபத்து! பொருள்கள் எரிந்து நாசமாகின!



யாழ்ப்பாணம்,ஏப்.1

யாழ்.நகரில் உள்ள தனியார் வர்த்தகக் களஞ்சியம் ஒன்றில் தீப்பற்றியதால் அங்கிருந்த பெறுமதியான பொருள்கள் எரிந்து நாசமாகின.

இச்சம்பவம் நேற்றுமுற்பகல் 10.30 மணியளவில் யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் நாதன்ஸ் திரையரங்குக்கு முன்பாக உள்ள தனியார் களஞ்சியம் ஒன்றிலேயே இடம்பெற்றுள்ளது.

குறித்த தனியார் களஞ்சியத்தில் முற்பகல் 10.30 மணியளவில் தொழிலாளர்கள் பொருள்களை அடுக்கிக்கொண்டிருந்தபோது தீ விபத்து இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது.


இதனைத் தொடர்ந்து உடனடியாக யாழ். மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவிற்குத் தகவல் கொடுத்ததையடுத்து, சம்பவ இடத்திற்கு விரைந்த தீயணைப்புப் பிரிவினர் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

இதன்பின் எஞ்சிய பொருள்களை பணியாளர்கள் மீட்கும் பணியில் ஈடுபட்டனர்.

இதேவேளை சம்பவ இடத்திற்கு விரைந்த யாழ்.பொலிஸாரும் இராணுவத்தினரும் பொருள்களை மீட்கும் பணிக்கு உதவிபுரிந்தமையும் அவதானிக்கமுடிந்தது. இந்தத் தீ விபத்துக்கான காரணம் எதுவென இதுவரை கண்டறியப்பட வில்லை.

சம்பவம் தொடர்பாக யாழ்.பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(4-9)




# தையல் நிலையம் திறந்துவைப்பு

வண்ணை,ஏப்.1

கரித்தாஸ் - கியூடெக் நிறுவனத்தால் மாதகலில் 4 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட தையல் நிலையம் திறந்துவைக்கப்பட்டது.

கியூடெக் நிறுவன இயக்குநர் அருட்பணி கி.யோ.ஜெயக்குமார் இந்த நிலையத்தைத் திறந்துவைத்தார்.

சண்டிலிப்பாய் பிரதேசத்திற்கு உட்பட்ட பகுதிகளில் சுனாமியால் பாதிக்கப்பட்ட 25 யுவதிகளுக்கு வாழ்வாதார சுயதொழில் திட்டத்தின்கீழ் தையல் பயிற்சிகள் வழங்கப்பட்டிருந்தன.

அவர்களைச் சுயசார்பு நிலைக்கு முன்னெடுத்து வலுப்படுத்துவதற்காக மேற்படி தையல் நிலையத்தை கரித்தாஸ் - கியூடெக் நிறுவனம் அமைத்து வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

(50-160)

# குடாநாட்டு உணவகங்களில் திடீர்ப் பரிசோதனை நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.1

குடாநாட்டில் உள்ள உணவகங்களில் மாவட்டப் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை உத்தியோகத்தர்கள் கடந்த வெள்ளிக்கிழமை திடீர்ப் பரிசோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

குடாநாட்டு ஊணவகங்களில் தின்பண்டங்கள் மாறுபட்ட விலைகளில் விற்பனை செய்யப்பட்டு வந்தன.

இதையடுத்து யாழ்.மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினர் மேற்கொண்ட நடவடிக்கையின் காரணமாக அரச அதிபர் தலைமையில் கூட்டம் நடத்தப்பட்டு தின்பண்டங்களின் விலைகள் நிர்ணயம் செய்யப்பட்டன.

உணவகங்களில் தின்பண்டங்கள் நிர்ணயிக்கப்பட்ட விலைகளில் விற்பனை செய்யப்படுகின்றனவா என்பதைப் பரிசோதிக்கவே பாவனையாளர் அதிகார சபையின் உத்தியோகத்தர்கள் திடீர்ப் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

பருத்தித்துறை, அச்சுவேலி, நெல்லியடி, உடுப்பிட்டி, கல்வியங்காடு ஆகிய பகுதிகளில் உள்ள உணவகங்களில் இந்தத் திடீர்ப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இந்தத் திடீர்ப் பரிசோதனையின்போது தின்பண்டங்களினைக் கூடுதலான விலையில் விற்பனை செய்த உணவகங்களின் உரிமையாளர்கள் எச்சரிக்கை செய்யப்பட்டனர்.

அதேவேளை, நிர்ணயிக்கப்பட்ட விலைகளை விட அதிக விலைகளில் இனிமேல் தின்பண்டங்கள் விற்பனை செய்யப்பட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் உணவக உரிமையாளர்கள் அறிவுறுத்தப்பட்டனர்.

(4-9)

# சிறுவர்களுக்கான போட்டிகள்


யாழ்ப்பாணம்,ஏப்.1

சாவகச்சேரி பிரதேச சபையின் கச்சாய் பொதுநூலக அபிவிருத்திச் சபையினர் மாதத்தின் கடைசி ஞாயிற்றுக்கிழமைகளில் சிறுவர்களுக்கான போட்டிகளை நடத்தவுள்ளனர்.

முன்பள்ளி மாணவர்கள் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரையான வகுப்பு மாணவர்களிடையே பேச்சு, சொல்வளம், கட்டுரை ஆகிய போட்டிகளை நடத்தி வெற்றி பெறுவோருக்குப் பரிசில்கள் வழங்கவுள்ளனர்.

போட்டிகளின் ஆரம்பநிகழ்வு கடந்த 29ஆம் திகதி நூலக மண்டபத்தில் நடைபெற்றது.

(50-207)



தந்தை செல்வாவின் 111ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு யாழ்.முற்றவெளியில் செல்வா சதுக்கத்தில் அமைந்துள்ள அன்னாரது உருவச் சிலைக்கு தந்தை செல்வா அறங்காவல் குழுவின் தலைவர் பேராயர் எஸ்.ஜெபநேசன், எழுத்தாளர் கலாநிதி க.குணராசா, யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் ஆகியோர் மாலை அணிவிப்பதை முதல் மூன்று படங்களிலும் காணலாம். நிகழ்வில் கலந்துகொண்டோர் தந்தை செல்வா நினைவிடத்தில் மலரஞ்சலி செய்வதை படத்தில் காணலாம்.


(படங்கள்: லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுப்பு: ஒளவையன்


ராஜா ரவிவர்மாவின் பதிப்போவியத்தினையே படத்தில் காண்கின்றோம். பதிப்பு என்ற புதிய ஊடகச் சாத்தியத்தினூடாக, பெருமளவில் வெகுஜன மயப்பட்ட, ராஜா ரவிவர்மாவின் அனேக ஓவியங்கள் இந்தியாவில் மட்டுமன்றி காலனிய காலத்தில் யாழ்ப்பாணத்திலும் பிரபலமாகியிருந்தன. ஒரு காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தின் வீட்டு அலங்காரத்தின் ஒரு பகுதியாகவும், சாமியறைகளில் 'அதிகார பூர்வமான' கடவுள் உருவங்களாகவும் இவை இடம்பெற்றிருந்தன. -பாலன்குட்டி

# வர்ணப் படங்களின் பதிவுப் பெட்டகம்




நன்றி: நுண்கலைத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

படத்தில் நீங்கள் பார்ப்பது சத்தியமாக ஒட்டகமல்ல, நாய்தான். அதுவும் சாதாரண நாயல்ல, உலகிலேயே உயர்ந்த - உயரமான- நாய். 'கிப்சன்' என்ற இந்த நாய் 7 அடி, 2 அங்குலம் (2.18 மீற்றர்) உயரத்தைக் கொண்டதால், உலகின் உயரமான நாய் என்ற 'கின்னஸ்' சாதனையை நிகழ்த்தியுள்ளது. 19 சென்ரி மீற்றர் உயரமுடைய- சராசரித்தன்மை கொண்ட- 'சூயி' என்ற நாயோடு நட்புடன் உலா வந்த கொண்டிருக்கிறது கிப்சன்.



படத்தில் தெரிகின்ற ஆலயம் வல்லை வெளியிலுள்ள முனியப்பர் ஆலயம் ஆகும். இந்த ஆலயம் முறிகண்டிப் பிள்ளையார் ஆலயத்தைப் போன்று,வீதியால் செல்லும் பிரயாணிகளால் தவறாமல் தரிசிக்கப்படுகின்ற ஆலயமாகும். வாகனங்களில் செல்வோர் தமது வாகனங்களை விட்டு இறங்கி இந்த ஆலயத்தைத் தரிசித்துச் செல்வதை அன்றாடம் அவதானிக்க முடிகிறது. பல்வேறு ஈழத்து இலக்கியங்களிலும் இந்த ஆலயம் இடம் பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆலயத்தை நாமும் தரிசித்தபோது 'கிளிக்'செய்த படமே இது.
(படமும் ,தகவலும் :-கலைஞன்)





விவசாயம் என்றவுடனேயே சட்டெனஞாபகத்துக்கு வருவது ஏர்தான். ஒரு காலத்தில் விவசாயத்தின் குறியீடாகவே ஏர் மாறிப்போயிருந்தது. விலங்குகளின் வலுவைப் பயன்படுத்தி, வயலை உழுவதற்கு ஏர் பயன்படுகின்றது. இதனைக் கலப்பை என்றும் சொல்வதுண்டு. வெகு நேர்த்தியாக மண்ணைப் புரட்டி, வளம் சேர்க்கும் கலப்பைகள் இப்போது காலாவதியாகிக் கொண்டிருக்கின்றன. இப்போதெல்லாம் வயல்களில் கலப்பைகளுக்குப் பதில், உழவு இயந்திரங்கள்தான் உறுமிக்கொண்டு திரிகின்றன. (படமும் ,தகவலும்:-எஸ்.ஸ்ரீகுமரன்)






பொன்னாலை வீதி, வட்டுக்கோட்டையில் (வட்டு.யாழ்ப்பாணக் கல்லூரிப் பின்புறம்) படத்தில் காணப்படுகின்ற இளைப்பாற்று மடம்அமைந்துள்ளது. 1850களில் அமைக்கப்பட்டதாகக் கூறப்படும் இது நான்கு தூண்களில் நிறுத்தப்பட்டு அதன் மேல் கிடுகால் வேயப்பட்ட மிக எளிய வடிவமாகும். அதன் அருகாகக் கேணி, ஆவுரஞ்சிக்கல் என்பனவும் அமைக்கப்பட்டுள்ளன. இன்று இக்கேணி பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றது. ஆவினங்கள் நீர் அருந்தத்தக்க வகையில் சாய்வாக அமைக்கப்பட்ட படிவரிசைகளுடன் அமைந்த கேணியும், இளைப்பாற்று [illegible]களும், புதர்களும் நிறைந்து பாழடைந்து நிலையில் இப்போது இருப்பது வருத்தத்துக்குரியது. இதை நிவர்த்திப்பவர் யாரோ?
(படமும், தகவலும்:-சோ.குமுதா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழுப்பு வகை உணவுகளால் மாரடைப்பு!



இன்று நாகரீக மோகத்தில் மூழ்கி, நம்மில் பலர் உணவகங்களுக்குச் சென்று, பிட்சா,சாஸ், கிங்ஸ் பேகர் இறைச்சி வகைகள், மக் டொனால்ட்ஸ் சான்ட் விச், பொரியல் வர்க்கங்கள் போன்றவற்றைச் சாப்பிடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். அத்தகையோர் இந்த ஆய்வு அறிக்கையைப் பார்த்த பின்னர் அந்தப் பக்கமே தலை வைத்துப் படுக்க மாட்டார்கள்.

உணவு வர்க்கங்களால் ஏற்படும் ஆபத்துக்களை அறிவதற்கு 52 நாடுகளில் சுமார் 16000 நபர்களிடம் ஆய்வுகள் நடாத்தப்பட்டன. 19 வகையான உணவு ரகங்களைக் குறிப்பிட்டு வினாக்கொத்து தயாரிக்கப்பட்டு மாரடைப்பால் பாதிக்கப்பட்ட 5,561 நபர்களிடமும், இருதய நோய் உள்ளவர்களென அடையாளம் காணப்பட்ட 10,646 பேரிடமும் கொடுக்கப்பட்டு, அவர்களது வழமையான உணவு வகைகளைக் குறிப்பிட்டுத் தரும்படி கேட்கப்பட்டது. அவர்கள் எழுதிக் கொடுத்த பதில்களை விரிவாக ஆராய்ந்த விஞ்ஞானிகள் என்ன முடிவிற்கு வந்தார்கள் தெரியுமா? கொழுப்பு, அதிகளவு உப்பு, மற்றும் இறைச்சி வகைகள் அடங்கிய மேற்கத்திய உணவு ரகங்களை உண்பவர்களில் 35 வீதம் பேருக்கு மாரடைப்புச் சாத்தியம் உருவாகியிருந்தது. இவ்வகை உணவுகளில் உப்பு அதிகம் சேர்க்கப்படுவதால் இரத்த அழுத்தம் அதிகரிப்பதாகவும், மற்றும் கொழுப்பு வகைகளால் நாளங்கள் அடைபட்டு மாரடைப்பு நோய் உருவாகும் வாய்ப்பு உண்டாகுவதாகவும் கண்டு பிடிக்கப்பட்டது.

எனவே கொழுப்புள்ள இறைச்சி வகைகள் வதக்கல், பொரியல்கள் முதலியவற்றைக் குறைத்து, காய்கறிகள், பழங்கள் குறிப்பாக தக்காளிப்பழத்தை நாளாந்த உணவில் சேர்த்து உட்கொண்டு வந்தால் மாரடைப்பு பயமின்றி வாழலாம் என விஞ்ஞானிகள் அறிவுரை பகர்கின்றார்கள்.

தொகுப்பு: எஸ்.பேராசிரியன்.




## தகவல் பெட்டகம்

# பணம் எப்போது புழக்கத்தில் வந்தது?



மிக நீண்டகாலமாக மனிதன் பணப் புழக்கம் நடைமுறையில் இல்லாமலே வாழ்ந்து வந்துள்ளான். ''பண்டமாற்று'' என்று நாம் கூறும் நடைமுறைதான் வெகுகாலம் வரை வழக்கில் இருந்து வந்துள்ளது.

ஆதிகால மனிதனால் உபயோகிக்கப்பட்ட பணம் போன்ற பொருள்கள் உணவு பெறவும் உடைகளைப் பெறவுமே பயன்படுத்தப்பட்டுள்ளன.

அமெரிக்க செவ்விந்தியர்கள் ஓடுகளால் செதுக்கப்பட்ட 'வம்பும்' (Wampum) என்றழைக்கப்படும் ஒருவகை நாணயத்தைப் பயன்படுத்தியுள்ளனர்.

புகையிலை, தானியங்கள், தோல்கள், உப்பு மற்றும் மணிகள் பணமாகப் பயன்படுத்தப் பட்டுள்ளன. பின்னர் இந்தவகைப் பணத்தின் இடத்தில் உலோகக் கட்டிகள் இடம்பெறலாயின.

பணத்தை நாணயக்குற்றி வடிவத்தில் முதன்முதல் பாவிக்க ஆரம்பித்தவர்கள் லிதியன்கள் ஆவர். (Lydians) ஆஸியா மைனரில் வாழ்ந்த மக்கள் இவர்கள். கி.மு 8 ஆம் நூற்றாண்டில் இவர்கள் உலோகத்தினாலான நாணயக்குற்றிகளை உருவாக்கலானார்கள். அவை அமைப்பிலும், எடையிலும் ஒரே அளவிலான வையாக இருந்தன. அதனால் இலகுவில் அடையாளம் காணக்கூடியனவாயிருந்தன. அதற்கு முன்னரே தங்கமும், வெள்ளியும் பணமாகப் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் நாணயத்தின் வடிவில் பயன்படுத்தப்படவில்லை. அவை கட்டிகளாகவும், துண்டுகளாகவும் பயன்படுத்தப்பட்டன. அவைகளிலிருந்து சிறு துண்டுகள் வெட்டி எடுக்கப்படலாயின. ஆனால் அவை சுத்தமாக இருக்கும் என்பதிலோ எடை சரியாக இருக்கும் என்பதிலோ நிச்சயமற்ற தன்மை இருந்தது. லிதியர்கள் தாம் முதன்முதலில் உலோகத் துண்டுகளில் முத்திரை பதித்து அவைகளின் நிறை மற்றும் சுத்தம் தொடர்பான உறுதிப்பாட்டை ஏற்படுத்தினார்கள். ஏனைய மக்கள் சமூகத்தினரும் இதனைப் பின்பற்றத் தொடங்கியதால் நாணயக்குற்றிகள் எங்கும் புழக்கத்துக்கு வரலாயின.

மத்திய காலத்திற்குப் பிறகு நம்பிக்கையின் பேரில் ஒருவர் செய்யும் வாக்குறுதியானது உண்மையான பணம் போல ஏற்றுக்கொள்ளும் ஒருமுறை நடைமுறைக்கு வந்தது. நகை வியாபாரிகள், வணிகர்கள், வட்டிக்குப் பணம் கொடுப்போர் போன்றவர்கள் எழுத்து மூலம் இவ்வாறு வாக்குறுதி கொடுக்கத் தொடங்கினார்கள்.

இதன் வழியில் காலப்போக்கில் பண நோட்டுகள் புழக்கத்தில் வந்துவிட்டன. அவை கடதாசி வடிவில் இருப்பதால் கையாள்வதற்கு இலகுவாகவும், தங்கத்தை விட பத்திரமானதாகவும் விரைவிலேயே அரசுகளும், வங்கிகளும் இதனைப் பின்பற்றி கரண்சி நோட்டுகளை வழங்கத் தொடங்கின.


-ரம்யன்

## காணாமல் போனவர்!

சின்மயி

''மனிதம்''
இவரை நான்
பிறந்ததில் இருந்து
காணவில்லை
இப்படி ஒருவர்
பூமியில் பன்னெடுங்காலம்
வாழ்ந்ததாகக்
கூறப்படுகின்றது
இப்போதும் இவர் உயிருடன் இருப்பதாக
நம்பப்படுகிறது
கடைசியாக இவர்
எப்போது எங்கே காணப்பட்டார்
என்பது எவர்க்கும்
சரியாக நினைவில்லை
''மனிதாபிமானம்''
என்பது இவரது
முழுப்பெயர்
மனித நேயம்
மனிதத் தன்மை
என்ற வேறு பெயர்களில்
அழைக்கப்படுபவர்;
இவர் இருக்கும் இடம்
பிரகாசமாக இருக்கும் எனவும்
இவரைக் கண்டவர்கள்
மகிழ்வுடன் காணப்படுவர்
என்றும் சொல்லப்படுகிறது
இவரையாரேனும் கண்டால்
அன்றி......
இவர் இருக்கும் இடம்பற்றித்
தகவல் தெரிந்தால்
கீழ்க்கண்ட முகவரிக்கு(த்)
தகவல் தரவும்
''மனிதன்'' மேற்பார்த்து
''மனிதனாய் வாழ விரும்புவோர் இல்லம்''

# மனிதனைப் போலவே இயந்திர மனிதன்



''ரோபோ'' மனிதனைப் போலவே உணர்ச்சிவசப்படும் இயந்திர மனிதனாக உருவாக்கப்படுவது உறுதியாகிவிட்டது. ஆண்,பெண் 'ரோபோ' உருவாக்குவது சுலபமாகிவிடும். அதற்கேற்ப உணர்வு பூர்வமான குணங்கள் அதனிடம் இருக்கும். இதனைக் கூறுகின்றபோது, உங்களுக்குத் தலைசுற்றுகின்றதா...? பிரிட்டன் விஞ்ஞானி டேவிட் லெவி என்பவர்தான் இப்படிச் சொல்லியிடுக்கின்றார்.

கலிகாலம் முத்திப்போச்சு என்று பெரியவர்கள் சொல்லி வருகின்றனரே, அது உண்மைதான் போலிருக்கிறதே என்று நினைக்கிறீர்களா? சரிதான் போலும்! வீட்டில், அலுவலகத்தில், தொழிற்சாலை என வேலைகளைச் செய்ய 'ரோபோ' பயன்படுத்தப்படுகின்றது. பல துறைகளில் மனிதர்களுக்கு ஈடாக வேலை செய்யும் திறன் படைத்த கணனி தொழில்நுட்பத்துடன் கூடிய 'ரோபோக்களை ஜப்பான், அமெரிக்கா உட்பட மேலும் பலநாட்டு விஞ்ஞானிகள் உருவாக்கி வருகின்றனர். பிரிட்டனைச் சேர்ந்த லெவி ஜப்பானிய விஞ்ஞானிகள் உருவாக்கிய ரோபோக்களைப் பார்த்து, பலவகை ரோபோக்களை உருவாக்குவதில் ஈடுபட்டார். இவர் மனிதனைப் போலவே 'புசுபுசு' தோல் கொண்டதும், உணர்வுபூர்வமான 'ரோபோவை உருவாக்குவதில் சபதம் எடுத்த இவரது இந்த ஆராய்ச்சி இன்னும் வெற்றி பெறவில்லை. ஆனால் அதற்கான வழிவகைகளில் வெற்றிகண்டு வருகின்றார். எனது ஆராய்ச்சியின் வெற்றி உலகிற்கு விரைவில் வரத்தான் போகிறது என்றும் கூறியுள்ளார்.

-கவி

S.J.MOTORS
Bajaj விற்பனைக்கு...
டிஸ்கவரி Discover
135 கறுப்பு, சிகப்பு, நீலம்.
CT 100 மரூன்
Pulsar பல்சர் 200 கறுப்பு, சிகப்பு
Pulsar பல்சர் 180 கறுப்பு, சிகப்பு
XCD கறுப்பு, சிகப்பு, நீலம்
தற்போது விற்பனையில்...
S.J.MOTORS ஸ்ரான்லி வீதி,யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரிசளிப்பு விழா

மணிவதனன், ஜெயச்சந்திரா சகோதரர்களின் ஞாபகார்த்த மாக நடத்தப்பட்ட கரம், மேசைப்பந்து விளையாட்டுப் போட்டி களில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி யில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மத்திய கல்லூரி அதிபர் எல்.ஓங்காரமூர்த்தி கலந்து கொள்வார். (50)

## நீங்கா நினைவலைகள் 22 ஆம் ஆண்டு

தோற்றம் 24 * 06 * 1926



மறைவு 05 * 04 * 1987

### அமரர் செல்வி ப.இராமநாதன்

(ஓய்வுபெற்ற அதிபர், இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்)

திதி: 01.04.2009

வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியிணைக்கு வாய்ந்த மலரெதுவோ
வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது
விநாயகப் பெருமானையே சிந்தையிலிருத்தி
கடமை கண்ணியம் கட்டுப்பாடு தவறாமலும்
மனம் வாக்குச் செயலால் தூய்மையோடும்
சிறந்த மனநேயத்தோடும் வாழ்ந்த
உத்தமரை நெஞ்சம் மறப்பதில்லை
நினைவை இழப்பதில்லை.

திருமதி கமலா சாரநாயகம் (அமெரிக்கா.)
திருமதி க.லம்போதரன் (சகோதரி), யாழ்ப்பாணம்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் 26.02.1928 மறைவு 02.03.2009

### அமரர் சிற்றம்பலம் செல்லையா

எமது குடும்பத்தின் தலைவர் சிவப்பேறடைந்த போது பிரிவுத்துயரில் நேரடியாகக் கலந்து கொண்டு ஆறுதல் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் தந்தி, தொலைபேசி மூலமாகவும், பத்திரிகை வாயிலாகவும் மற்றும் துண்டுப்பிரசுரங்கள் மூலமாகவும் அனுதாபம் தெரிவித்தோருக்கும் எம்முடன் தோள் கொடுத்து உதவிகள் வழங்கிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (01.04.2009) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் கிரியைகளில் கலந்து கொண்டு ஆத்மசாந்திகருப் பிரார்த்திக்குமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

15, முருகமூர்த்தி வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (s1012)

நீங்கா நினைவுடன்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### மாணிக்கம் மயில்வாகனம் (பப்பர்மாமா)

[முன்னாள் விசேட ஆணையாளர், உள்ளூராட்சி சபை - மல்லாகம், பண்டத்தரிப்பு, செயலாளர், தர்மகர்த்தா சபை கும்பிழாவளைப் பிள்ளையார் கோயில், அளவெட்டி]



டச்சு வீதி, மாரிசிட்டியைப் பிறப்பிடமாக வும், பிள்ளையார் கோயில் வீதி, அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் மயில் வாகனம் (30.03.2009) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் நகுலேஸ்வரியின் அன்புக் கணவரும், அருட்குமாரன் (லண்டன்), இந் திரகுமாரன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற உதய குமாரன் (வள்ளல்) சிவகுமாரன் மற்றும் ஜெயந் தகுமாரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் அருள்நங்கை (லண்டன்), ராஜவதனி (பிரான்ஸ்), சுகந் தினி (ஆசிரியை, யா/சிறுப்பிட்டி அ.த.க. பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமனும் எழிலி அருள்மொழியின் (லண்டன்) அன்புப் பேர னுமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத் தரப்படும்.

தகவல்: மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.

பிள்ளையார் கோயில் வீதி, அளவெட்டி வடக்கு, அளவெட்டி (384)

## சமய சந்திகளில்

யாழ்ப்பாணம்,ஏப்.1

மண்கும்பாண் வெள்ளைப்புற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் திங்கட்கி ழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற் றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து பத்துத் தினங்கள் திருவிழா நடைபெற வுள்ளது.

எதிர்வரும் 14 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் புதன்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடை பெறவுள்ளன. திருவிழாக் காலங்களில் தினமும் மகேஸ்வர பூசை இடம்பெற வுள் ளதாக ஆலய பரிபாலன சபையினர் அறி வித்துள்ளனர். (201-267)

* * *

வடமராட்சி,ஏப்.1

பருத்தித்துறை மருதடி ஞானவைரவர் கோவில் வருடாந்த அலங்காரத் திருவிழா கடந்த 28 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் 9 ஆம் திகதி வியாழக் கிழமை 13 ஆம் திருவிழாவும் மறுநாள் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பூங்கா வனத்திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (201-236)

* * *

யாழ்ப்பாணம்,ஏப்.1

நல்லூர் பண்டாரக்குளம் பிள்ளையார் ஆலய வருடாந்த பெருந்திருவிழா இன்று புதன் கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 14 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திரு விழாவும் மறுநாள் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம் பெறவுள்ளன. (201)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



குமாரலிங்கம் இரகுநாதன்

31.03.2009 அன்று உதயன் பத்தி ரிகை 2 ஆம் பக்கத்தில் வெளியான முதலாம் ஆண்டு நினைவஞ்சலி என்ற விளம்பரத்தில் குமாரலிங்கம் இரகு நாதன் என்ற பெயர் விடுபட்டுப் போய் விட்டமைக்கு வருந்துகின்றோம். விளம் பரத்தைப் பெயருடன் திருத்தி வாசிக்கும் படி கேட்டுக் கொள்கின்றோம்.

## வீடு வாடகைக்கு

பழைய பூங்கா வீதியில், சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு:- 32/16,அர்ச்சக வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே: 222 6266

## செயற்றிட்ட ஆரம்ப நிகழ்வு

புத்தூர் மேற்கு கலைமதி இலங்கை வங்கி அபிவிருத்திக் கிராமத்தில் ஆங்கி லமொழி விருத்திச் செயற்றிட்டம் இன்று புதன்கிழமை பிற் பகல் 5 மணிக்கு வைபவரீதியாக ஆரம்பித்து வைக் கப்படுகிறது.

இலங்கை வங் கியின் அச்சுவேலிக் கிளையின்கிராமஅபி விருத்தித் திட்டத் தின் கீழ் புத்தூர் மேற்கு கலைமதி கிராமத்தில் பல்வேறு செயற் பாடுகள் முன்னெடுக் கப்பட்டு வருகின் றன. ஆங் கிலமொழி விருத்திச் செயற் றிட்ட நிகழ்வு கலை மதி சனசமூக நிலை யத்தின் தலைவர் என்.கதிர்காமநாதன் தலைமையில் நடை பெறும் நிகழ்வில் பிரதம விருந்தின ராக இலங்கை வங்கி யின் வடபிராந் திய செயற்பாட்டு முகா மையாளர்ஆர்ஜேயேந் திரா கலந்துகொண்டு ஆங்கிலமொழிவிருத் திச் செயற்பாட்டை ஆரம்பித்து வைக் கவுள்ளார். (50-28)

## புதிதாக நியமனம்பெற்ற முகாமைத்துவ உதவியாளர்களுக்கு பயிற்சிநெறி

பொதுமுகாமைத்துவ உதவியாளர் சேவைக்கு 10.12.2007 இல் நியமனம் செய்யப்பட்ட அலுவலர்களுக்கான பயிற்சிநெறி நடைபெறவுள்ளது. இதற்கென அவர்களிடமிருந்து பின்வரும் விவரங்கள் கோரப்பட்டுள்ளன.

முழுப்பெயர், அலுவலக முகவரி ஆகிய விவரங்களை திணைக்களத் தலைவர்கள் ஊடாக எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் யாழ். அரச அதிபருக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களுக்கு 021 222 2771, 021 222 2233, 021 222 2234 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது (201)




Modern Beauty Parlour

பேசியல்ஸ், இந்து, கிறிஸ்தவ மணப்பெண் அலங்காரங்கள் மற்றும் பிறந்தநாள், திருமண கேக் ஐசிங் வகைகள், கண்புருவம் சீராக்குதல், முடி நீளமாக்குதல், முடிசுருட்டுதல் போன்றன செய்து கொடுக்கப்படும்.

34, கனகரத்தினம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு: 57/25, திருமகள் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். T.P.: 077 4124660, 060221-8297


## சேவைநலன் பாராட்டு



### திருமதி பஞ்சாட்சரதேவி ஞானசேகரவேல் (S.L.T.S.-I)

(விசேட பயிற்சி - கணிதம்)

சேவை விவரம்

| | |
|---|---|
| மன்/உயிலங்குளம் றோ.க.த.பாடசாலை | 02.09.1974.-31.12.1974 |
| மன்/பள்ளிமுனைவு றோ.க.த.பாடசாலை | 01.01.1975-31.01.1978 |
| மன்/புனித சவேரியார் பெண்கள் கல்லூரி | 01.02.1978-07.08.1979 |
| யா/பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை | 08.08.1979-31.12.1979 |
| யா/வேலணை துரைச்சாமி ம.ம.வி. | 01.01.1980-31.12.1980 |
| யா/பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை | 01.01.1981-31.12.1981 |
| யா/செங்குந்த இந்துக் கல்லூரி | 01.01.1982-31.03.2009 |

பஞ்சாட்சரதேவி எனப் பகர் நாமம் கொண்ட பாவையாய்
'மஞ்சு மிஸ்' என மாண்புடன் அழைக்கும் மங்கையாய்
செங்குந்த இந்துவில் சீரிய சேவைதனை செய்தசேயிழையே!
இங்கிதமாய் இருபத்தெட்டு ஆண்டுகள் எம் மாணவருக்கு
ஏற்ற வகையில் கணிதத்தைக் கற்பித்த கனி மொழியே!
இந்து மன்றத்தின் இசைவான பணிகளிலும்
கணித மன்றத்தின் கவினுறு வளர்ச்சியிலும்
கண்ணியமாய் உழைத்த காரிகையே வாழி நீ வளமுடன் பல்லாண்டு வாழி!!

நலன்புரி மன்றம் - யா/செங்குந்த இந்துக் கல்லூரி.


COMPUTER EXPRESS
#167, Kasthuriyar Rd, Jaffna
Branch : #07, Science Center Road, Kodikamam Rd, Nelliyadi
Phone : 021 2228250 / 0777222422

மாபெரும் புலமைப்பரிசில்திட்டம் - 2009 80%OFF

அனைத்துக் கற்கைநெறிகளிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

| | | |
|---|---|---|
| Diploma in Microsoft Office 3 Months 1500/= | Diploma in Desktop Publishing 4 Months ~~10000~~ 2000/= | Diploma in Web Page Designing 3 Months ~~10750~~ 2150/= |
| Diploma in Graphic Designing 4 Months ~~10750~~ 2150/= | Diploma in Hardware Engineering 3 Months ~~10000~~ 2000/= | Diploma in Auto CAD 3 Months ~~10000~~ 2000/= |
| Diploma in Accounting Package 3 Months ~~10750~~ 2150/= | Diploma in Computer Science 4 Months ~~10750~~ 2150/= | Honors Diploma in Computer Science 3 Months ~~13000~~ 2600/= |

50% Off Advance Courses

| | |
|---|---|
| Dip. in. Multimedia | 2750 |
| Dip. in. Video Editing | 3250 |

Computer Express ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும் சர்வதேச தரம்வாய்ந்த சான்றிதழ்கள் வரையறையற்ற செய்முறைப்பயிற்சி

April 15 ம் திகதிக்கு முன்னர் பதிவுசெய்துகொள்ளவும்.

யாழ்நகரில் ஆரம்பம்
Batch I: 03/04/2009 -09AM -03PM
Batch II: 04/04/2009 -09AM
Batch III: 05/04/2009 -09AM
Batch IV: 06/04/2009 -03PM

நெல்லியடியில் ஆரம்பம்
Batch I: 02/04/2009 -10AM
Batch II: 04/04/2009 -10AM
Batch III: 05/04/2009 -10AM
Batch IV: 07/04/2009 -10AM


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச நாணய நிதியத்துடன் அரசு இரகசிய உடன்படிக்கை!

## ஐக்கிய தேசியக் கட்சி தகவல்

கொழும்பு,ஏப்.1

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடனைப் பெறுவதற்காக இலங்கை அரசு அந்நிதியத்துடன் திருட்டு ஒப்பந்தம் ஒன்றைச் செய்துள்ளது என்று ஐ.தே.க. எம்.பி. கபீர் ஹாசிம் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

இலங்கையின் பொருளாதார நெருக்கடி காரணமாக தமிழ் - சிங்கள புதுவருடத்தைத் தானும் மக்கள் கொண்டாட முடியாத நிலையில் உள்ளனர்.

இந்த மோசமான பொருளாதார வீழ்ச்சியைக் கட்டுப்படுத்துமாறு நாம் கடந்த மூன்று வருடங்களாக அரசுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றோம். அரசு அதைக் கவனத்தில் எடுக்கவில்லை.

இந்த நெருக்கடிகளைச் சமாளிக்க அரசு சர்வதேசத்திடம் கடன்களை வாங்குகிறது. அந்தக் கடன்கள் ஒருபோதும் மக்களைச் சென்றடைவதில்லை.

ஏற்கனவே பெற்ற கடன்களையும், வட்டிகளையும் செலுத்துவதற்காகவே அந்தப் பிணை பயன்படுத்தப்படுகிறது. இதனால் நாட்டில் கடன் சுமை அதிகரித்துக் கொண்டு போகின்றது.

தற்போது சர்வதேச நாணய நிதியத்திடம் கடனைப் பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. சர்வதேச நாணய நிதியத்திடம் ஒருபோதும் கடனைப் பெறப்போவதில்லை என்று மத்திய வங்கி ஆளுநர் அண்மையில் சொல்லியிருந்தார். ஆனால், இப்போது நிலைமை மாறிவிட்டது.

இலங்கை வந்திருந்த சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகளுடன் பேச்சு நடத்தி கடனைப் பெறுவதற்காக அரசு திருட்டுத்தனமாக ஒப்பந்தம் ஒன்றையும் செய்துள்ளது.

இந்த ஒப்பந்தம் என்னவென்று எமக்குத் தெரியாது. இது நாட்டுக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும். மிகவும் சூட்சுமமான முறையில் இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டிருப்பதை நாம் அறிவோம்.

அது மாத்திரமன்றி அரசு அச்சடித்துள்ள நாணயம் எவ்வளவு, பொருளாதார வீழ்ச்சியைத் தடுக்க அரசு எடுத்திருக்கும் நடவடிக்கை என்ன என்பது பற்றியெல்லாம் அரசு இந்த நாட்டுக்குத் தெரியப்படுத்தவேண்டும்.

பொருளாதார வீழ்ச்சி காரணமாக தொழில் நிறுவனங்கள் மூடப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அனேகமானவர்கள் தொழிலை இழந்துள்ளனர்.

அரச ஊழியர்களை தொழிலில் இருந்து நீக்குவதற்கான நடவடிக்கைகளையும் அரசு இப்போது மேற்கொண்டு வருகிறது - என்றார். (சி)

# கோலப் போட்டிகள்

கோப்பாய்,ஏப்.1

கோப்பாய் கோட்டப் பாடசாலைகளின் ஆரம்பப்பிரிவு மாணவர்களின் கோலப் போட்டிகள் எதிர்வரும் 4ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் இடம்பெறவுள்ளதாகக் கோப்பாய்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சித்திரவடிவேல் அறிவித்துள்ளார். (50-72)

# வன்னி மக்களுக்கான அமெ. அரசு மருந்துப் பொருள்கள் கையளிப்பு

கொழும்பு,ஏப்.1

வன்னியில் இருந்து காயமடைந்த நிலையில் உள்ள மக்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக அமெரிக்க அரசு சுமார் 77 ஆயிரம் டொலர் பெறுமதியான மருந்துப் பொருள்களை வழங்கியுள்ளது - என்று சுகாதார அமைச்சுத் தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சில் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்ற வைபவத்தின்போது இலங்கைக்கான பிரதி அமெரிக்கத் தூதுவர் ஜேம்ஸ் ஆர். மோர் சுகாதார அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவிடம் இந்த மருந்துப் பொருள்களைக் கையளித்தார்.

இந்த வைபவத்தில் உரையாற்றிய அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, வடக்கிலிருந்து இடம்பெயர்ந்தோரின் நலன் தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, கூடிய கரிசனை கொண்டுள்ளார்.

விடுவிக்கப்படாத பிரதேசங்களில் உள்ள மக்களுக்கு மருந்துப் பொருள்கள் உட்பட அத்தியவசியப் பொருள்களை அரசு, அனுப்பி வைத்துள்ளது. பொதுமக்களுக்காக அனுப்பிவைக்கப்படும் இப்பொருள்களை புலிகள் சூறையாடுவதாக அறிக்கைகள் குறிப்பிடுகின்றன எனக் கூறினார்.

இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவிகள் வழங்கியமைக்காக அமெரிக்க அரசுக்கு தனது பாராட்டுக்களைத் தெரிவிக்கிறது என அமைச்சர் இங்கு மேலும் குறிப்பிட்டார்.

இங்கு கருத்துத் தெரிவித்த அமெரிக்க பிரதித் தூதுவர், விடுவிக்கப்படாத பிரதேசங்களில் சிக்கியுள்ள மக்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்துகொடுப்பதற்காக இலங்கை அரசு, மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளை பாராட்டினார் எனவும் அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது. (சி)

# ஐ.தே.கவுக்குள் உள்வீட்டுப் பிரச்சினையா? அடியோடு மறுக்கின்றார் அக்கட்சி எம்.பி.!

கொழும்பு,ஏப்.1

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் உள்வீட்டுப் பிரச்சினைகள் எவையுமில்லை என்றும் அக்கட்சியை எவராலும் பிளவுபடுத்த முடியாது என்றும் ஐ.தே.கட்சி எம்.பி. லக்ஷ்மன் செனவிரட்ன கூறியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் உள்வீட்டுப் பிரச்சினை தலைதூக்கியுள்ளது என்றும் இதனால், கட்சி பிளவுபடப் போகின்றது என்றும் வதந்திகள் பரப்பப்படுகின்றன.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கட்சியின் சிரேஷ்ட தலைவராக ஆசைப்பட்டார். அவர் அதை செயற்குழுவிடம் தெரிவித்தார். செயற்குழு இது தொடர்பாக ஆராய 8 பேர் கொண்ட குழுவொன்றை அமைத்தது.

அந்தக் குழு சமர்ப்பித்த சிபாரிசுகள் தொடர்பாக ஆராய்வதற்காக நாம் பல தடவைகள் கூடினோம். அந்த இடத்தில் எதுவிதப் பிரச்சினையும் ஏற்படவில்லை.

கட்சி விடயங்கள் தொடர்பாக நான்கு சுவருக்குள் பேசப்படும் விடயங்களை நான் வெளியில் ஒருபோதும் சொல்லமாட்டேன்.

ஆனால், கட்சியில் பிளவு ஏற்பட்டுள்ளது என்றும் நானும் ஜோன்சன் பெர்ணான்டோவும் அரசுடன் இணையப் போகிறோம் என்றும் கூறப்படுவதை ஏற்கமுடியாது. நாம் ஒருபோதும் அரசுக்கு வக்காலத்து வாங்க' மாட்டோம்.

எந்தச் சந்தர்ப்பத்திலும் நான் கட்சியுடன்தான் இணைந்திருப்பேன். எனது உடம்பில் ஓடுவது பச்சை ரத்தம். சில ஊடகங்கள் இது தொடர்பாகப் பிழையான கருத்துகளை மக்களுக்குத் தெரிவிக்கின்றன - என்றார். (சி)




நல்லூர் லயன்ஸ் கழகம் சங்கிலியன் மன்றத்தில் நடத்திய இலவச மருத்துவ முகாமின்போது யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர்கள் மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொள்வதைப் படத்தில் காணலாம். நல்லூர் லயன்ஸ் கழகப் பிரதிநிதிகளும் படத்தில் காணப்படுகின்றனர். *(படம்: லக்ஸ்மன்)*

# ஆக்கத்திறன் போட்டியும் பரிசளிப்பும்

யாழ்ப்பாணம்,ஏப்.1

யாழ்.மாநகராட்சி மன்ற முன்பள்ளிச் சிறார்களின் ஆக்கத்திறன் போட்டியும் பரிசளிப்பு நிகழ்வும் நாளை வியாழக்கிழமை நடைபெறும். (50-224)

# இலங்கையில் போர் நிறுத்தம் வேண்டி சுவிஸில் தமிழர் மாபெரும் ஒன்றுகூடல்

ஜெனிவா,ஏப்.1

தமிழினப் படுகொலையைக் கண்டித்தும், உடனடிப் போர் நிறுத்தத்துக்கு ஏற்பாடு செய்யுமாறு இலங்கை அரசிற்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் என வலியுறுத்தியும் சுவிற்ஸர்லாந்தின் நாடாளுமன்ற சதுக்கத்தின் முன்பாக நேற்றுமுன்தினம் ஆயிரக்கணக்கான தமிழர்கள் மாபெரும் கவனயீர்ப்பு ஒன்றுகூடலை நடத்தினர்.

சுவிஸ் தமிழர் பேரவையின் அழைப்பை ஏற்று நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சுவிற்ஸர்லாந்தின் பல பகுதிகளில் இருந்தும் நாடாளுமன்ற சதுக்கத்தின் முன்பாக அணிதிரண்ட மக்கள் தமது உரிமை கோரிக்கைகளை முன்வைத்து இலங்கைத் தமிழரின் பேரவலத்தை வெளிப்படுத்தினர்.

சுவிஸ் தமிழர் பேரவையின் ஆலோசகர் வன்னித்தம்பி தங்கரத்தினம் பொதுச்சுடரினை ஏற்றி நிகழ்வைத் தொடக்கி வைத்தார்.

இந்த ஒன்றுகூடலில் கொழும்பில் இருந்து வருகை தந்திருக்கும் நவசமாஜக் கட்சியின் கல்விக்கழக பொறுப்பாளரும் ஊடகவியலாளருமான ரணத் பிரேம்லால் குமாரசிங்க உரையாற்றினார்.

'இன்றில்லையேல் என்றுமில்லை' என்ற வாசகம் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கி முழக்கம் எழுப்பினர்.

அத்துடன், வன்னி பெருநிலப்பரப்பில் மக்கள் தற்போது எதிர்நோக்கும் மனி தப் பேரவலங்களுக்கு முடிவு காணும் வகையில் சுவிஸ் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வன்னி மக்களின் உடனடித் தேவையான உணவு, மருந்து என்பவற்றை அந்த மக்களுக்குச் சென்றடையக்கூடிய வகையில் சுவிஸ் அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் ஒன்றுகூடிய மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

அதேவேளையில் சுவிஸின் பேர்ண் மாநிலம் மற்றும் ஏனைய மாநிலங்கள் உட்பட சகல பகுதிகளிலும் இந்த கவனயீர்ப்பு ஒன்றுகூடலை விளக்கி பல மொழிகளிலும் எழுதப்பட்ட பல்லாயிரக்கணக்கான துண்டுப் பிரசுரங்கள் வீடு வீடாக விநியோகிக்கப்பட்டன.

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை சுவிஸ் அரசு அங்கீகரிக்கவேண்டும் என வலியுறுத்தி ஒரு லட்சத்திற்கும் அதிகமான கையெழுத்து பெறப்பட்ட மனுவும் ஒன்றுகூடலின் முடிவில் சுவிஸ் அரச அதிபர் கன்ஸ் ருடொல்ப் மேர்சிடம் சுவிஸ் தமிழர் பேரவையால் கையளிக்கப்பட்டது. (அ-சி)

# கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்தின் தகுதிகாண் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர்

யாழ்ப்பாணம், ஏப்.1

கிழக்கிழங்கைப் பல்கலைக்கழகத்தில் கட்புலக் கலை, இசை, நடனம் ஆகிய கற்கை நெறிகளுக்கான தகுதிகாண் பரீட்சை நடைபெறவுள்ளது.

நடனக் கற்கைநெறிக்கான பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் விவரம் நேற்றைய உதயனில் வெளியாகியிருந்தது.

கட்புலக்கலை, இசை ஆகிய கற்கை நெறிகளுக்குத் தெரிவான மாணவர்களின் விவரம் வருமாறு:

**கட்புலக்கலை**

கே.பிரதீப் - யாழ்ப்பாணம், எஸ்.புரந்தரா - உடுவில் கிழக்கு, ரி.சுதர்சன் - திருநெல்வேலி, கே.தர்சிகா - வண்ணார்பண்ணை, ரி.பிரதீஸ்கண்ணா - கந்தர்மடம், எம்.வாகீசன் - யாழ்ப்பாணம், வை.தர்மினி - கந்தர்மடம், பி.தர்சிகா - யாழ்ப்பாணம், வை.சிவேந்தன் - இணுவில் கிழக்கு, எஸ்.நிறோஜன் - கரவெட்டி மேற்கு, எஸ்.ரவிவர்மன் - இணுவில் தெற்கு, எஸ்.சுலோசனா - யாழ்ப்பாணம், ஈ.அனுஷன் - தாவடி வடக்கு, எஸ்.சத்தியப்பிரியா - யாழ்ப்பாணம், ஐ.நிஷாந் - அல்வாய் மேற்கு, யு.றமணன் - கரவெட்டி மேற்கு, எச்.எம்.பாத்திமா னுஸ்கா - அக்கரைப்பற்று, கே.பிரகாஷ் - நீர்வேலி மேற்கு, எஸ்.சரண்யா - யாழ்ப்பாணம், என்.தினேஷ் - சுன்னாகம் கிழக்கு, ஆர்.சுரேந்தர் - ஊரேழு மேற்கு, எம்.மஞ்சுளா - உடுப்பிட்டி, எம்.வைதேகி - பொலிகண்டி மேற்கு, ரி.றஜீவ் - உரும்பிராய் கிழக்கு, எஸ்.கர்ஷனா பிரவீன் - ஒலுவில்-1,

**இசை**

கி.யோகா - ஒட்டிசுட்டான், எஸ்.நளினி - வல்வெட்டித்துறை, வி.நிரேகா - கெருடாவில் தெற்கு, ஆர்.றஞ்சிதா - நீர்வேலி வடக்கு, கே.ராதிகா - சுதுமலை தெற்கு, ஜி.நிருத்திகா - கோப்பாய் வடக்கு, பி.கஜித்தா - ஏழாலை கிழக்கு, வை.சகிதா- நீர்வேலி வடக்கு, வை.ஜனனி - சுழிபுரம், வி.ரஜனி - கோப்பாய் மத்தி, என்.சிவதர்சினி - தொல்புரம் மத்தி, வி.அருள்மொழி - யாழ்ப்பாணம், ஆர்.அஜித்தா - கைதடி வடக்கு, நதியா - வல்வெட்டித்துறை, ஜே.சுபஜீவனா - மானிப்பாய், எ.லாவண்யா - உடுவில், ரி.வைஸ்ணவி - நீர்வேலி வடக்கு, ஆர்.சிவதர்மினி - சாவகச்சேரி சரசாலை மத்தி, எஸ்.கம்ஷாளினி - இணுவில் தெற்கு, வி.ரஜித்தா - உடுவில், என்.மேகலா - கொக்குவில் மேற்கு, வை.அமிர்தா[illegible] - சாவகச்சேரி, [illegible] - ஏழாலை மேற்கு, வை.சிந்துபா - சுன்னாகம், கே.கேகாயம் - கரம்பன் கிழக்கு, சி.சுந்தரி - சூராவத்தை, கே.பத்மசிறி - வேலணை கிழக்கு, எஸ்.நர்மலா - சரசாலை தெற்கு, கே.ராதிகா - சரசாலை மத்தி, ஆர்.சாளினி - கோப்பாய் மத்தி, இ.கிருத்திகா - பண்ணாகம் தெற்கு, ஆர்.சிவதர்சினி - காரைநகர், எஸ்.சோபிகா - கோப்பாய் தெற்கு, என்.கௌரி - மூளாய், வி.றஞ்சினி - சுழிபுரம் மத்தி, எஸ்.மயூரி - நல்லூர், எஸ்.மிபுரா - உரும்பிராய் வடக்கு, எஸ்.சிந்து - யாழ்ப்பாணம், ஆர்.ராஜேந்திரன் - யாழ்ப்பாணம், என்.மதுரா - சிறுப்பிட்டி வடக்கு, என்.பிரதீபா - கொடிகாமம், ரி.யாழினி - மிருசுவில், என்.சுறானி - சாவகச்சேரி, வி.ரி.தர்சினி - சுன்னாகம், எஸ்.சுகிர்தா - கற்கோவளம், ஆர்.நிஷாந்தினி - சூராவத்தை வடக்கு, பி.ஜசிந்தா - ஏழாலை தெற்கு, ஏ.தாரணி - கல்வயல், ஜே.மதுரா - சங்கானை, ஜே.பி.லாமேஸ் லித்தினி - இருபாலை, கே.சுதர்சினி - கோப்பாய் தெற்கு, ஆர்.சுதர்சன் - மிருசுவில், கே.செல்வலட்சுமி - காரைநகர், வி.சுபாசினி - அளவெட்டி - எஸ்.நிரோசன் - நீர்வேலி மத்தி, கே.கலைமகள் - கரவெட்டி மேற்கு, எஸ்.பிரவீணன் - சரசாலை வடக்கு, வி.மதனபாபு - கைதடி வடக்கு, [illegible] - [illegible]துவில் கிழக்கு, எஸ்.சோபிகா - பண்டத்தரிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவு, திறன், மனப்பாங்கை உயர்த்த தலைமைத்துவப் பண்பு இன்றியமையாதது.

## உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தெரிவிப்பு

ஆனைக்கோட்டை,ஏப்.1

அனைத்து அரச உத்தியோகத்தருக்கும் இருக்க வேண்டிய பண்புகளில் தலைமைத்துவப் பண்பு முக்கியமானதொன்றாகும். அறிவு, திறன், மனப்பாங்கை வளர்ப்பதற்கு இன்றியமையாதது தலைமைத்துவப் பண்பாகும் என்று பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் தெரிவித்துள்ளார்.

லயன் எஸ்.ஜெயவத்சலனின் நிதி அனுசரணையுடன் மானிப்பாய் பிராந்திய லயன்ஸ் கழகத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட வலி.தென்மேற்கு பிரதேசசபை உத்தியோகத்தர்கள் பங்குகொண்ட தலைமைத்துவப் பயிற்சி நெறியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எமது பொறுப்பை நாமே ஏற்று அதனை சிறந்ததொரு தலைமைத்துவ வெளிப்படுத்தலின் மூலம் செயற்படுத்துவதற்கு கடமைப்பட்டவர்கள் ஆகின்றோம். எமது தலைமைத்துவத்தை இனம்கண்டு அதனை மேலும் வளர்ப்பதற்குரிய கடப்பாடும் எம்மிடம் உள்ளது. இதுபோன்ற பயிற்சி நெறிகளில் பங்கு கொண்டு அதனை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும் - என்றார்.

வலி.தென்மேற்கு பிரதேச சபைச் செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் தலைமையில் இரு நாள்களாக நடைபெற்ற இப்பயிற்சி நெறியில், மாநகரசபை முன்னாள் ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம், யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறைப் பீடாதிபதி கே.தேவராஜா, பேராசிரியர் எஸ்.ரி [illegible] ஜஸ்வரன் மற்றும் யாழ். மாவட்ட உணவு மருத்துவப் பரிசோதகர் ரி.மகாதேவன் ஆகியோர் கலந்துகொண்டு தலைமைத்துவப் பயிற்சிகளை வழங்கி னர்.

சுமார் நாற்பது பிரதேச சபை உத்தியோகத்தர் இதில் பங்குபற்றி தலைமைத்துவப் பயிற்சியைப் பெற்றுக் கொண்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (09-20)


## விற்பனைக்கு

Hero Stream 49cc மோட்டார்சைக்கிள், வெஸ்பா ஸ்கூட்டர் மற்றும் அம்பிளிவயர் 100w, 2 Box 10" என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு: சி.சி.நாதன்
இல.16/3, விதானையார் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

## விற்பனைக்கு

கடை நிலை, கதவு (மரம்) விற்பனைக்குண்டு.
ஸ்ரீலங்கா புத்தகசாலை
234, K.K.S.வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 222 2573

## இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர்.


## உள சமூகப் பணிக்கான சான்றிதழ் பயிற்சி நெறிக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்,ஏப்.1

சாந்திகம் நிறுவனத்தால் உளசமூகப் பணிக்கான ஆறுமாதகால சான்றிதழ் பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இந்தப் பயிற்சிநெறி வார நாள்களில் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை நடைபெறவுள்ளது.

விண்ணப்பதாரி குறைந்த பட்சம் ஜி.சீ.ஈ.உயர்தரம் சித்தியடைந்திருப்பதுடன் 22-45 வயதுக்குட்பட்டவராக இருக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்பதாக மேற்படி நிறுவனத்தில் பெற்று நிறைவேற்றுப் பணிப்பாளர், சாந்திகம், 8/1, கற்பக விநாயகர் ஒழுங்கை, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு தபால் மூலமோ, நேரடியாகவோ விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள் ளது. மேலதிக விவரங்களுக்கு நிறுவனத்துடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளுமாறும் நிறைவேற்றுப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## தடகளப் போட்டிகள்

கோப்பாய், ஏப்.1

வலி.கிழக்குப் பிரதேச செயலகப் பிரிவில், பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான தடகளப் போட்டிகள் எதிர்வரும் சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மைதானத்தில் காலை 7.30மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

பதிவு செய்த கழக வீரர், வீராங்கனைகள் அனைவரையும் குறித்த நேரத்திற்கு வருகை தந்து கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார். (04-72)


## 31 ஆம் நாள் நினைவில்...



முதுகலைமாணி அபிவிருத்திக் கற்கைநெறி, 2ஆம் அணி மாணவி
திருமதி தி.குகாஜினி
அவர்களின் அன்புத் தந்தை
சிற்றம்பலம் செல்லையா
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரது ஆத்மா நன்நிலை அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

முதுகலைமாணி - அபிவிருத்திக் கற்கைகள்
2ஆவது அணி பட்டப்பின் படிப்புகள் பீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

இணைப்பாளர்,
விரிவுரையாளர்கள்,
மாணவர்கள்.
(83871)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்தியமும்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 20 | 03 |
| 03 | 03 |
| 1930 | 2009 |

திருமதி மகேஸ்வரி மாசிலாமணி

இந்த மண்ணில் நீண்ட காலம் வாழ்ந்து
எமக்கெல்லாம் வாழ்விற்கு உயர்ந்த வழிகாட்டி
எம்மை அன்புடனும் பாசத்துடனும் வளர்த்து
பணியாவும் முடிந்ததென்று இறைவனடி சேர்ந்து விட்டீர்
உங்கள் ஆத்மா சிவபதம் கலந்து நிற்க இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

38, வேலப்பர் ஒழுங்கை,
அரியாலை.
(84007)
பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டிகரண அழைப்பும், நன்றி நவிலலும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 22 | 03 |
| 07 | 03 |
| 1920 | 2009 |

அமரர் கந்தையா சின்னத்தம்பி
(வைத்திலிங்கம் - ஓய்வுபெற்ற ஆசிரியர்)

02.04.2009

கடந்த 03.03.2009 செவ்வாய்க்கிழமையன்று சிவபதமடைந்த எமது குடும்ப விளக்கின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நாளை (02.04.2009) வியாழக்கிழமை காலை 5 மணி முதல் எமது இல்லத்தில் நடை பெறும். இந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக் கிரியைகளில் பங்கு கொண்டோர், துயர் பகிர்ந்தோர், உதவிகள் புரிந்தோர் அனைவருக்கும் எமது நன்றியறிதலையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்துபாடசாலை வீதி, வல்வெட்டி.
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் பண்டாரி பரமநாதன்

அன்னையின் அரவணைப்பில் 18.05.1974
ஆண்டவன் அரவணைப்பில் 11.04.2008

திதி: ஷஷ்டி (01.04.2009)

அப்பா!
அப்பாவென்று இனியாரை அழைப்பது தெய்வமே!
ஓராண்டு சென்றாலும் உங்கள் அன்பு முகம் மாறாது.

மனைவி, பிள்ளைகள்,
உறவினர்.
கைதடி மேற்கு, கைதடி.
(83991)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் பிரம்மஸ்ரீ
இரத்தினசபாபதிக் குருக்கள்
சுப்பிரமணியக் குருக்கள்

மண்ணில் 20.01.1931
விண்ணில் 12.04.2008

திதி: வளர்பிறை ஸப்தமி
(01.04.2009)

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்.

குடும்பத்தினர்.

77/2, A.V.றோட்,
கொழும்புத்துறை.

## இரண்டாமாண்டு நினைவலைகள்

01.04.2009



நவிண்டில் மண்ணில்
22 . 06 . 1980

லண்டன் மண்ணில்
25 . 03 . 2007

லண்டன் மாநகரில் கருணை அற்ற காலன் கவர்ந்த
அமரர் சிவபாலன் சிவராமன் (ராசா)
திதி: ஸப்தமி

நவிண்டிலம்பதியில் மழலையாய் உதித்து
லண்டன் நகரில் வாழ்ந்த
அன்புத் தம்பி ராசா!
ஏன் எங்களைத் தவிக்கவிட்டு
அமைதியாய் துயில் கொண்டாய் ராசா!
பெற்றெடுத்த நாமும் தனித்துப் போன
உடன்பிறப்புகளும் தவித்துப்போன உறவுகளும்
பாரினில் பரிதவிக்க பாதிவயதினிலே
விண்ணுலகிற்கு சென்று இன்று ஈராண்டுகள் ராசா!
உன் அன்புக்குரல் எம் காதினில் ஒலிக்கையிலே
நித்தம் உன் நினைப்பால் எம் நெஞ்சம் ஏங்குது ராசா!
புன்னகை சிந்தும் இன்முகத்தோடு
எங்களிடம் வந்திடு ராசா!

(சி/557728)

"[illegible] வாசா",
கரணவாய் மத்தி, கரவெட்டி.

தங்கள் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழப் பிரச்சினையில் பா.ம.க. மீது வீண்பழி சுமத்துகிறார் கருணாநிதி

## டாக்டர் ராமதாஸ் குற்றச்சாட்டு



சென்னை, ஏப்ரல் 01

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் பா.ம.க. மீது முதல்வர் கருணாநிதி வீண் பழி சுமத்துகிறார் - என்று அக் கட்சியின் நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தி.மு.க. எம்.பிக்கள் பதவி விலக முன்வந்தார்கள்; ஆனால், பாட்டாளி மக்கள் கட்சி மற்றும் கம்யூனிஸ்ட் கட்சி எம்.பிக்கள்தான் பதவி விலக முன்வரவில்லை என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி கூறியிருக்கிறார்.

தமிழகத்தைச் சேர்ந்த மூன்று சட்டப் பேரவை உறுப்பினர்கள் அண்மையில் பதவி விலகியிருக்கிறார்கள்.

ஆனால், இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக, தி.மு.க. எம்.பி.க்கள் யாரிடம் பதவி விலகல் கடிதத்தைக் கொடுத்தார்கள்?. மக்களவை உறுப்பினர்கள் தங்களது பதவி விலகல் கடிதத்தை மக்களவைத் தலைவரிடம் கொடுக்க வேண்டும்; அதுதான் மரபு. கொடுக்க வேண்டிய இடம் டில்லி.

பதவி விலகல் கடிதத்தை கொடுக்க விரும்புகிறவர்கள் சென்னையில் இருந்தால், விமானத்தில் டில்லிக்குப் போய் அங்கு மக்களவைத் தலைவரைச் சந்தித்து விலகல் கடிதத்தை முறைப்படி கொடுக்க வேண்டும்.

ஆனால், அன்றைய தினத்தில் டில்லியில் இருந்த தி.மு.க. எம்.பிக்கள் அங்கே அவைத் தலைவரிடம் கடிதத்தைக் கொடுக்காமல், சென்னைக்கு அழைத்து வரப்பட்டு கட்சித் தலைவரிடம் கொடுத்திருக்கிறார்கள். கட்சித் தலைவரிடம் பதவி விலகல் கடிதத்தைக் கொடுத்தால் அதன் விளைவு என்ன என்பது யாருக்கும் தெரியாததல்ல. யாரும் அறியாததும் அல்ல.

தி.மு.க. எம்.பிக்கள் முறைப்படி பதவி விலகல் கடிதத்தை அவைத் தலைவரிடம் அன்றைய தினத்தில் அளித்திருந்தால், டில்லியில் இருந்து பா.ம.க. எம்.பிக்களும் அதற்கு அடுத்த நொடியே தங்களது பதவி விலகல் கடிதத்தை அளித்திருப்பார்கள்.

ஆனால், முறைப்படி பதவி விலகல் கடிதத்தை அவைத் தலைவரிடம் கொடுக்காமல், அதனை கட்சித் தலைவர் வாங்கி வைத்துக் கொண்டது வெறும் நாடகம். அப்படி கட்சித் தலைவர் வாங்கி வைத்துக் கொண்டதால், நாடாளுமன்றத்தில் மத்திய அரசுக்கு எந்த ஆபத்தும் வந்துவிடாது என்று சொல்லிக் கொண்டு, இப்போது பா.ம.க. மீது வீண் பழி போட்டு அரசியல் ஆதாயம் தேட முற்படுவது கடைந்தெடுத்த அரசியல் பித்தலாட்டமாகும்.

தி.மு.க. தலைவர் கருணாநிதி இலங்கைத் தமிழர் பிரச்சினையில் முன்னுக்குப் பின் முரணாகப் பேசிக் கொண்டிருக்கிறார். அவர் இதில் மிகவும் குழம்பிப் போயிருக்கிறார்.

இன்னொரு நாட்டின் உள்நாட்டுப் பிரச்சினையில் அண்டையிலே உள்ள நாடு (இந்தியா) குறுக்கிட்டு என்ன செய்ய முடியும் என்று நம்புகிறீர்கள் என்று கடந்த ஆண்டு ஒக்டோபரில் செய்தியாளர்கள் கேட்கிறார்கள். அதற்கு விடையளித்த தி.மு.க. தலைவர், ''பங்களாதேஷ் எப்படி வந்தது'' என்று சூடாகப் பதிலளித்திருக்கிறார். ஆனால், இன்றைக்கு என்ன சொல்கிறார்.

இந்தியா ஒரு இறையாண்மை மிக்க நாடு, இலங்கையும் இன்னொரு இறையாண்மை மிக்க நாடு. எனவே, அந்த நாட்டுப் பிரச்சினையில் இந்தியா ஓரளவுக்குத்தான் தலையிட முடியும். ஓரளவுக்குத்தான் அழுத்தம் கொடுக்க முடியும் என்று கூறுகிறார்.

இப்படி முன்னுக்குப் பின் முரணாகவும், குழப்பத்திலும் உள்ள தி.மு.க. தலைவர் தேர்தல் வந்ததும் மக்களின் கோபத்திலிருந்து தப்பிக்க, பா.ம.க. மீதும் மற்ற கட்சிகள் மீதும் பழி சுமத்தி அரசியல் ஆதாயம் தேட முற்படுகிறார்.

இலங்கையிலே போர் நிறுத்தம் செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்துவதை விட்டுவிட்டு, அதற்காக வாதாடுவதை விட்டுவிட்டு, போரினால் அடிபட்டு விழுகின்ற தமிழர்களுக்கு உதவுகிறோம் என்று சொல்கிறார். அடிப்பதை நிறுத்த நடவடிக்கை எடுங்கள் என்று சொன்னால், அடிபட்டவர்களுக்கு மருந்து தடவுகிறோம் என்கிறார்.

எனவே, தி.மு.க. அரசு இதுவரை மேற்கொண்ட நடவடிக்கைகளெல்லாம், ''சுகம் வரும், ஆனால் ஆள் தப்பாது'' என்ற கதையாகத்தான் இருக்கிறது. இதை தமிழக மக்கள் நன்றாகவே அறிவார்கள். அவர்களை ஏமாற்ற முடியாது. வரும் தேர்தலில் தெளிவான தீர்ப்பை வழங்குவார்கள் - என்றுள்ளது.

# மகாபாரதத்தின் அபிமன்யு வருண்

## தாய் மேனகா வர்ணிப்பு

பரெய்லி, ஏப். 01

என் மகன் வீரம் மிக்க அபிமன்யு. மகாபாரதத்தில் அபிமன்யு சக்கரவியூகத்தை உடைத்துக் கொண்டு வெளியே வந்தமைபோல, வருண் காந்தியும் தன் மீதான குற்றச்சாட்டுகளிலிருந்து வெளியே வருவார் - என்று வருணின் தாயாரும், முன்னாள் மத்திய அமைச்சருமான மேனகா காந்தி கூறியுள்ளார்.



நேற்று முன்தினம் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அப்போது அவர் மேலும் கூறியவை வருமாறு -

என் மகனுக்கு எதிராக தேசிய பாதுகாப்புச் சட்டத்தைப் பயன்படுத்தி, காங்கிரஸ் கட்சியும், பகுஜன் சமாஜ் கட்சியும் வலையில் சிக்க வைத்துள்ளன. என் மகன் வீரம் மிக்க அபிமன்யு. மகாபாரதத்தில் அபிமன்யு சக்கர வியூகத்தை உடைத்துக் கொண்டு வெளியே வந்ததுபோல, வருண் காந்தியும் சர்ச்சைக்குரியதை பேசினார் எனக் கூறப்படும் குற்றச்சாட்டில் இருந்து வெளியே வருவார் - என்றார்.

# ஈழத் தமிழருக்காக மார்க்சிஸ்ட் கட்சி குரல் கொடுக்கவில்லை என்பது தவறு

## அடித்துக் கூறுகிறார் பிரகாஷ் கரத்

சென்னை, ஏப். 01

இலங்கைத் தமிழர்களுக்காக மார்க்சிஸ்ட் குரல் கொடுக்கவில்லை என்று சொல்வது தவறு. இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்பட வேண்டும் என்று தொடர்ந்து நாம் வலியுறுத்தி வருகிறோம் - என்று மார்க்சிஸ்ட் கட்சியின் அகில இந்திய பொதுச் செயலாளர் பிரகாஷ் கரத் கூறியுள்ளார்.

சென்னை தியாகராய நகரில் உள்ள மார்க்சிஸ்ட் கட்சியின் தமிழக தலைமை அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் மாலை, மார்க்சிஸ்ட் கட்சியின் தேர்தல் அறிக்கை தமிழில் வெளியிடப்பட்டது. இதனை வெளியிட்டு வைத்த பின்னர் செய்தியாளர்களிடம் பேட்டியளித்தபோதே அவர் இதனைக் கூறினார். மேலும் அவர் கூறியவை வருமாறு -



கடந்த 5 ஆண்டுகளில் காங்கிரஸ் கட்சி கடைப்பிடித்த பல்வேறு கொள்கைகளால் மக்களுக்கு நன்மை ஏற்படாததைக் கருத்தில் கொண்டு, இந்தத் தேர்தல் அறிக்கையில் பல்வேறு மாற்றுப் பொருளாதார அம்சங்களைச் சேர்த்துள்ளோம்.

அடுத்ததாக பதவியேற்கும் புதிய அரசு, இந்தியாவுக்கு தனியானதொரு புதிய வெளியுறவுக் கொள்கையை வகுக்க வேண்டும். கல்வித்திட்டத்தில் மதவாதம் புகாமல் பார்த்துக் கொள்வோம். கல்வி மற்றும் சுகாதாரத்துக்கான மிகப் பெரிய திட்டங்களை வகுத்து, தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறோம்.

கடந்த முறை, மதவாத பா.ஜ.கவை வீழ்த்த கூட்டணி அமைத்தோம். இந்த முறை பா.ஜ.கவுடன் சேர்த்து, காங்கிரஸையும் வீழ்த்த ஒரு மாற்றுக் கூட்டணி அமைத்துள்ளோம். எங்கள் கூட்டணியில் 9 கட்சிகள் உள்ளமை உங்களுக்குத் தெரியும். இந்தக் கூட்டணி நாளுக்கு நாள் விரிவடைந்து கொண்டே போகிறது.

தமிழகத்தில் அ.தி.மு.கவுடனும், பா.ம.கவுடனும் கூட்டணி சேர்ந்துள்ளோம். இந்தியாவில் காங்கிரஸ், பா.ஜ.க. அல்லாத மூன்றாவது கூட்டணி வலுப்பெற்று வருகிறது. காங்கிரஸ் கட்சியை எதிர்க்கும் முடிவு, கொச்சியில் நடைபெற்ற மத்திய குழுக்கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவாகும்.

தமிழகத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சிக்கு எத்தனை இடம் ஒதுக்கப்படும் என்பது பற்றி தமிழக தலைவர்கள்தான் விவாதிப்பார்கள். நான், தேர்தல் தொடர்பான மற்ற விடயங்களைப் பற்றி அவரிடம் பேச இருக்கிறேன். ஜெயலலிதா, பிரதமர் வேட்பாளராக பரிசீலிக்கப்படுவாரா என்பது பற்றி இப்போது எதுவும் சொல்ல முடியாது. தேர்தல் முடிவு வந்த பின்னர்தான் பிரதமர் பற்றி முடிவெடுக்கப்படும்.

எங்கள் கூட்டணியில் மாயாவதியின் பகுஜன் சமாஜ் கட்சி இல்லை. நாடு முழுவதிலும் அவர் தனித்தே போட்டியிடுகிறார். பிரதமர் விடயம் பற்றி இப்போதைக்குப் பேசப்போவது இல்லை. நாட்டில் தற்போதுள்ள சூழலில் மூன்றாவது மாற்று அணி ஆட்சி அமைய வேண்டியது அவசியமாகிறது. தேர்தலுக்கு முன்பாகவே பா.ஜ.க. தனிமைப்படுத்தப்பட்டுவிட்டது.

இலங்கைத் தமிழர்களுக்காக மார்க்சிஸ்ட் குரல் கொடுக்கவில்லை என்று சொல்வது தவறு. இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்பட வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். அமெரிக்காவுடன் செய்து கொள்ளப்பட்ட அணு ஒப்பந்தத்தை திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பதே எங்கள் கருத்து - என்றார்.

# தமிழகத்தின் முக்கிய கட்சிகள் வேட்பாளர் தேர்வில் தீவிரம்..!

## விரைவில் வெளியாகிறது பட்டியல்

சென்னை, ஏப். 01

மக்களவைத் தேர்தலுக்கு வேட்பாளர்களை தேர்வு செய்வதில் தமிழகத்தின் முக்கிய கட்சிகள் தீவிரமாக இறங்கியுள்ளன.

தமிழகத்தில் மக்களவைத் தேர்தல் மே 13ஆம் திகதி நடக்கிறது. வேட்புமனுத் தாக்கல் ஏப்ரல் 17ஆம் திகதி தொடங்குகிறது. கூட்டணி அமைப்பதை முக்கிய கட்சிகள் முடித்துவிட்டன. தி.மு.க. கூட்டணியில் காங்கிரஸ், விடுதலைச் சிறுத்தைகள், முஸ்லிம் லீக் ஆகியவை இடம் பெற்றுள்ளன. தி.மு.க. 21 தொகுதிகளிலும், காங்கிரஸ் 16, விடுதலைச் சிறுத்தைகள் 2, முஸ்லிம் லீக் ஒரு இடத்திலும் போட்டியிடுகின்றன.

அ.தி.மு.க. அணியில், பா.ம.க., ம.தி.மு.க., இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் ஆகியவை இடம்பெற்றுள்ளன. பா.ம.கவுக்கு 7 தொகுதிகள் கொடுக்க உடன்பாடு கையெழுத்தானது. பா.ம.கவின் 6 வேட்பாளர்களும் அறிவிக்கப்பட்டுவிட்டனர். இந்திய கம்யூனிஸ்ட் 3 தொகுதிகளில் போட்டியிட ஒப்பந்தம் செய்துள்ளது. அவர்களுக்கான தொகுதிகளும் அறிவிக்கப்பட்டுள்ளது. ம.தி.மு.க., மார்க்சிஸ்ட் கட்சிகளுக்கு தொகுதி ஒதுக்குவதில் இழுபறி ஏற்பட்டு, தொடர்ந்து பேச்சு நடந்து வருகிறது.

தே.மு.தி.க. தனித்துப் போட்டி என்று அறிவித்து, 33 தொகுதிக்கான வேட்பாளரையும் விஜயகாந்த் அறிவித்துவிட்டார். பா.ஜ.கவுடன் கூட்டணி அமைப்பது தொடர்பாக சமத்துவ மக்கள் கட்சி பேச்சு நடத்தி வருகிறது.

இந்த நிலையில் வேட்பாளர் தேர்வில் முக்கிய கட்சிகள் தீவிரமாக உள்ளன. தி.மு.க., வேட்பாளர் தேர்வுக்கான நேர்காணலை ஏப்ரல் 2ஆம் திகதி நடத்துகிறது.

அ.தி.மு.க., நேர்காணலை முடித்துவிட்டது. தொகுதி உடன்பாடு முடிந்ததும், வேட்பாளர் பட்டியலை அறிவித்துவிடும்.

ஏப்ரல் முதல் வாரத்தில் தேர்தல் பிரசாரத்தை தொடங்க வேண்டும் என்று திட்டமிட்டு அனைத்துக் கட்சிகளும் வேட்பாளர் தேர்வில் தீவிரமாக இறங்கியுள்ளன.

# கேரளாவுக்கு வந்தனரா புலிகள்? கொச்சியில் தீவிர தேடுதல் வேட்டை

கொச்சி, ஏப். 01

கேரள மாநிலம் கொச்சியருகே உள்ள ஒரு கடற்கரைக் கிராமத்துக்கு படகில் விடுதலைப் புலிகள் வந்தனர் என வெளியான தகவலைத் தொடர்ந்து, ஆலப்புழை - கொச்சி இடையே கடற்கரை முழுவதும் தீவிர தேடுதல் வேட்டை நடைபெறுகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

கேரள மாநிலம் கொச்சி மாவட்டத்தில் செர்தாலா அருகே உள்ள தைக்கால் என்ற கடற்கரை கிராம பகுதியில் நேற்றுமுன்தினம் படகொன்று வந்தது. அதில், விடுதலைப்புலிகள் அமைப்பின் சீருடை அணிந்த 15 பேர் இருந்தனர் என அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். அது தொடர்பாக, ஆலப்புழை பொலிஸ் நிலையத்துக்கு நேற்றுமுன்தினம் பிற்பகல் 3 மணிக்கு தகவல் கிடைத்தது.

அதைத் தொடர்ந்து, மாநிலம் முழுவதும் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. கொச்சி நகரை இலக்காக கொண்டு விடுதலைப் புலிகள் வந்து கொண்டிருக்கின்றனர் என தகவல்கள் பரவின. கடற்படை தளமான கொச்சியை விடுதலைப் புலிகள் தாக்கக்கூடும் என்று மத்திய உளவுத் துறை இரகசியமாகவும் கேரள பொலிஸாருக்கு எச்சரிக்கை விடுத்தது.

உடனே, கொச்சி நோக்கி செல்லும் வீதியில் அனைத்து வாகனங்களும் சோதனை செய்யப்பட்டன. நகருக்குள் நுழையும் அனைத்து வாகனங்களும் கொச்சி நகர பொலிஸ் கமிஷனர் மனோஜ் ஆபிரகாம் தலைமையில் தீவிரமாக கண்காணிக்கப்பட்டன. செர்தாலா - கொச்சி நெடுஞ்சாலையில் பொலிஸாருடன் இணைந்து கொமாண்டோ படையினரும் பாதுகாப்பில் ஈடுபட்டனர்.

இதற்கிடையே, செர்தாலா பகுதியில் உள்ள மக்கள் கூறுகையில், ''சில வீடுகளுக்கு இரண்டு பெண்களும் மூன்று ஆண்களும் வந்தனர். அவர்கள் தமிழில் பேசினர். ஆடைகள் இருந்தால் தருமாறு கேட்டனர்'' - என்று தெரிவித்தனர்.

இது குறித்து பொலிஸ் டி.ஜி.பி. ஜேக்கப் புன்னோஸ் கூறும்போது,

ஆலப்புழை முதல் கொச்சி வரை உள்ள பகுதிகளில் கடற்படை, கடலோர காவல் படை மற்றும் பொலிஸார் இணைந்து தீவிர சோதனையில் ஈடுபட்டுள்ளனர். விடுதலைப் புலிகள் ஊடுருவி இருக்கின்றனர் எனத் தகவல் கிடைத்தது. அது குறித்து உறுதி செய்யப்படாத வரை, அந்தத் தகவல் சரியானதா அல்லது தவறானதா என்று எங்களால் கூற முடியாது - என்றார்.

# தமிழர்களின் வீடுகள் மீது ரொக்கெட் குண்டுவீச்சுகள்

## தமிழகம் வந்த இலங்கை அகதிகள் தகவல்

இராமேஸ்வரம், ஏப். 01

இலங்கையில் தமிழர்களின் வீடுகள் மீது ரொக்கெட் குண்டுவீச்சுகள் நடத்தப்படுவதால் ஏராளமானோர் படுகொலை செய்யப்படுகின்றனர் - என்று நேற்றுமுன்தினம் தனுஷ்கோடி வந்த அகதிகள் தெரிவித்தனர் என தமிழக நாளேடு தெரிவித்துள்ளது.

இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்திற்கும் இடையே நடந்துவரும் போரில் அப்பாவித் தமிழர்கள் ஏராளமானோர் படுகொலை செய்யப்படுகின்றனர்.

இதனால் தமிழர்கள் அகதியாக தனுஷ்கோடி, பாம்பனுக்கு வருகின்றனர். இந்த நிலையில் மன்னார், வவுனியாவைச் சேர்ந்த 5 ஆண்கள், 5 பெண்கள், 4 சிறுவர், சிறுமியர் ஆகிய 14 பேர் தலைமன்னாரில் இருந்து படகில் புறப்பட்டு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காலை தனுஷ்கோடி ஒத்தப்பெட்டி கரையில் வந்திறங்கினர்.

அங்கு வந்த அகதிகள் கூறியவை வருமாறு -

இலங்கையில் தமிழர்களின் வீடுகள் மீது ரொக்கெட் குண்டுவீச்சுகள் நடத்தப்படுகின்றன.

இதனால் தினமும் ஏராளமானோர் படுகொலை செய்யப்படுகின்றனர். இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்திற்கும் இடையே நடந்துவரும் போரால் பெரும் பேரவலம் தலை விரித்தாடுகின்றது - என்று கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய கூடைப்பந்தாட்டம்

வலி.வடக்கு, ஏப்.1

யாழ். மக்கள் வசந்த எழுச்சிப் பேரவை ஏற்பாட்டில் யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கு இடையே நடத்திவரும் லீக் முறையிலான கூடைப்பந்தாட்டப் போட்டியில் இன்று புதன்கிழமை பி.ப. 3 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ள போட்டிகளின் விவரங்கள் வருமாறு:

* யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ் (சொக்ஸ்) விளையாட்டுக் கழகம் எதிர் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி விளையாட்டுக் கழகம்.
* யாழ்ப்பாணம் கெனியன்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ் (புளூஸ்) விளையாட்டுக் கழகம்.

## கிரிக்கெட் போட்டிகளுக்கான விண்ணப்ப முடிவுதிகதி

வலி.வடக்கு, ஏப்.1

யாழ். மக்கள் வசந்த எழுச்சிப் பேரவையினால் யாழ்.மாவட்ட மட்டத்தில் நடத்தப்படவுள்ள ஆறு பேர் பங்குபற்றும் ஐந்து ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய மென்பந்துக் கிரிக்கெட் போட்டிக்கான விண்ணப்ப முடிவு திகதி இன்று புதன்கிழமையாகும்.

போட்டிகளில் கலந்த கொள்ள விரும்பும் கழகங்களை பிரதேச செயலக, உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள விளை யாட்டு அலுவலகங்களுடனோ அல்லது யாழ்ப்பாணம் ப.நோ.கூ.சங்கத்திற்கு முன்னாள் அமைந்துள்ள 'ரில்கோ' விடுதியிலோ தொடர்பு கொண்டு விண்ணப்பங்களை பெற்று விண்ணப்பிக்குமாறு ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

(203-86)

## மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம்
## நாவற்குழி உலக உணவுத்திட்ட மாவட்டக் களஞ்சியம் தற்காலிக உதவிக் களஞ்சியக் காப்பாளர், காவலாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரல்

ஒப்பந்த அடிப்படையில் (நாளாந்தச் சம்பளம்) மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பதவி: உதவிக் களஞ்சியக் காப்பாளர் (I)

தகைமைகள்

1.க.பொ.த (சா/த) பரீட்சையில் ஒரே தடவையில் கணிதம், ஆங்கிலம், தமிழ் உட்பட ஐந்து பாடங்களில் திறமைச் சித்தியுடன் சித்தியடைந்திருக்க வேண்டும்.
2.க.பொ.த. (உ.த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
3.கணணி அறிவு, மொழி வல்லமை, ஆகியவற்றில் போதியளவு அறிவு இருத்தல் வேண்டும்.
4.துறை சார்ந்த கடமையாற்றியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

வயதெல்லை: 21 வயதிற்கும் 50 வயதிற்கும் உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

பதவி: காவலாளர் (I)

தகைமைகள்

1.க.பொ.த (சா.த) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
2.களஞ்சியம் அமைந்துள்ள இடத்தில் இருந்து 10 கி.மீ சுற்றளவிலோ அல்லது அதற்கு குறைவான தூரத்திலோ வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.
3.தேகாரோக்கியம் உள்ளவராகவும் சிறந்த பண்புகள் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.
4.இத்துறையில் முன்னனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

வயதெல்லை: 21 வயதிற்கும் 50 வயதிற்கும் உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பம்: சுயமாகத் தயாரிக்கப்பட்ட சகல விவரங்களையும் உள்ளடக்கி விண்ணப்பம் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி: **15.04.2009**

தபாலுறையில் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிட்டு அனுப்பிவைக்கவும்.

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி: **திட்டப்பணிப்பாளர்,**
மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகம்,
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

க.கணேஷ்
அரசாங்க அதிபர்,
யாழ்.மாவட்டம். (சி/557734)

## கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.1

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக் கூட்டம் எதிர்வரும் ஐந்தாம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11 மணிக்கு வைத்தியசாலை மண்டபத்தில் சபைத் தலைவர் மு.நாகேந்திரராசா தலைமையில் நடைபெறும்.

(1-207)




## செல்வி பூலோகநாயகி சின்னத்துரை

எமது கல்லூரியில் 22 வருட ஆசிரிய சேவையினை அர்ப்பணிப்புடன் ஆற்றி 31.03.2009 அன்று ஓய்வுபெறும் ஆசிரியை செல்வி பூலோகநாயகி சின்னத்துரை அவர்கள் சிறந்த கணித பாட ஆசிரியையாகவும் பகுதித்தலைவராகவும் ஆற்றிய சேவையினைப் பாராட்டுவதுடன் அவர் தனது ஓய்வுக் காலத்தில் மனநிறைவுடனும் ஆரோக்கியத்துடனும் வாழ வாழ்த்துகின்றோம்.

யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி,
கல்லூரிச் சமூகம்.


மீண்டும் யாழ்.மண்ணில்
கொழும்பு இறையியல் கல்லூரி - யாழ்.கல்வி நிலையம் நடத்தும்

## "கிறிஸ்துவின் சாதனையாளர் - III" "Champions of Christ III
## தலைமைத்துவ வாலிபர் முகாம்

ஏப்ரல்: **13 - 17, 2009**
(திங்கள் மாலை முதல் வெள்ளி வரை)
இடம்: பரியோவான் கல்லூரி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
வயது எல்லை : **18 - 35**

* இனிய பாடல்கள்
* விளையாட்டுக்கள்
* ஊழியத்திற்கு உந்தித் தள்ளும் உன்னத செய்திகள்
* பயிற்சிப் பட்டறை - நாடகங்கள்
* உங்களுக்குள் மறைந்திருக்கும் திறமைகளை வெளிப்படுத்தும் நேரம்

இன்னும் பல
பங்குபற்ற மறக்க வேண்டாம்

விண்ணப்ப முடிவுதிகதி 20.03.2009 இல் இருந்து 07.04.2009 ஆக நீடிக்கப்பட்டுள்ளது என்பதனை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம். மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே வாலிபர்கள் அனுமதிக்கப்படுவதால் உங்கள் பதிவுக்கு முந்துங்கள்.

உங்கள் கவனத்திற்கு
பங்கு பெறுவோருக்கான தகைமைகள்

1. இவர்கள் 18 வயதிற்கு மேற்பட்ட 35 வயதிற்குட்பட்ட ஆண், பெண்கள்.
2. இவர்கள் உங்கள் சபையில் ஒரு வருடத்திற்கு மேல் இரட்சிக்கப்பட்டு/ அங்கத்தவர்களாக இருக்க வேண்டும்.
3. உங்கள் சபையில் ஏதாவது கிறிஸ்தவ பணியில் சிறிய பங்களிப்பேனும் செய்கிறவராக இருக்க வேண்டும்.

மேலதிக விவரங்களுக்கு:
**கொழும்பு இறையியல் கல்லூரி**
யாழ்.கல்வி நிலையம், 32/1, விதானையார் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 021 222 8513 (84016)


## மரண அறிவித்தல்
## சுப்பிரமணியம் பரிமளகாந்தன்

*(பழைய மாணவன், யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி)*



கனால்வீதி, மாதகலைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பரிமளகாந்தன் (20.03.2009) வெள்ளிக்கிழமை கனடாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர் சிற்றம்பலம் சுப்பிரமணியம் - பரிமளம் தம்பதியரின் மூத்த புதல்வனும் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி மரியாம்பிள்ளை - ரெபேக்கா தம்பதியரின் அன்பு மருமகனும் மரிய அசெம்ராவின் (லில்லி, கனடா) பாசமிகு கணவரும் வலன்ரீனா, மார்வின் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுமதி, கோமதி (ஆசிரியர் - யா/மாதகல் நுணசை வித்தியாலயம்), வளர்மதி, பானுமதி, ஜெயகௌரி (ஆசிரியர்), கடம்பேஸ்வரன், கண்ணன் (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் கு.ஜெயக்குமார், கோ.சிவதாஸ், இ.மனோகரன், அ.சுப்பிரமணியம், ச.மதிவதனன், க.திருச்செல்வி, க.தீபா ஆகியோரின் அன்பு மைத்துனரும் சுஜீபன், யதுசன், துயானீ, சரணியா, சர்மியா, யாதவன், கபில்ராஜ், விதுசன், நிசாந்தன், தனுசியா, கபில்குமரன் ஆகியோரின் மாமனும் தனுஸ்வரன், சோபிதன், மதுமிதா, ஜனனி, தர்சிகா ஆகியோரின் பெரியப்பாவும் நிரசி, இராசரத்தினம் (ஊழியர், பண்/பரிஷ் ப.நோ.கூ. சங்கம்) ஆகியோரின் அன்புப் பெறாமகனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (31.03.2009) செவ்வாய்க்கிழமை அஞ்சலிக்காக வைக்கப்பட்டது; இன்று (01.04.2009) புதன்கிழமை நல்லடக்க ஆராதனையின் பின் கனடாவில் Scot Funeral room,420, Dundes street, ontario வில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மைத்துனர்கள், சகோதரிகள்,
திரு.திருமதி கோ.சிவதாஸ்,
வ.மனோகரன் குடும்பத்தினர்.

மாதகல் மேற்கு,
மாதகல். (84006)


# CBM Contemporary Business Management




விசேடமாக வடிவமைக்கப்பட்ட இக்கற்கை நெறியானது முகாமைத்துவத் துறையில் பணிபுரிவோர் மற்றும் இத்துறையில் ஆர்வமுள்ள மாணவர்கள் தங்கள் தகைமைகளையும் திறமைகளையும் வளர்த்துக்கொள்வதற்கும் நவீன முகாமைத்துவத்தின் எண்ணக் கருக்களையும், சமகால தகவல் தொழில்நுட்ப, தொழில்நுட்ப பிரயோகங்களினை சிறந்தமுறையில் முகாமைத்துவத்தில் பயன்படுத்திக் கொள்ளவும் முகாமைத்துவ வழிமுறைகளை அறிந்து கொள்ளும் வகையிலும் அமைந்துள்ளது.

**Modules**

1. Management & Organizational Behaviour
2. Human Resource Management
3. Marketing Management
4. Financial Management
5. Business Communication
6. ICT For Managers

Duration : 6 Months
Commences : 26th April 2009
Registration now on...

**IIS CITY CAMPUS**
#200,Sivan Pannai Road,Jaffna.
Tel:021 222 8060 Fax:021 222 6933
Web: www.iiscitycampus.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின் பகுதிக்குள் படையினர் நத்தை வேகத்தில் முன்னேற்றமாம்

## ஏ.எவ்.பி. செய்திச் சேவை தகவல்

கொழும்பு, ஏப். 1

விடுதலைப் புலிகளின் பகுதிகளுக்குள் மிக வேகமாக முன்னேறி வந்த இராணுவத்தினர் தற்போது நத்தை வேகத்தில் நக கின்றனர் என ஏ.எவ்.பி. செய்திச் சேவை குறிப்பிட்டுள்ளது.

இது குறித்து அந்தச் செய்திச் சேவை தெரிவித்துள்ளவை வருமாறு:-

விடுதலைப் புலிகள் ஒரிரு நாள்களில் தோற்கடிக்கப்படுவார்கள் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உறுதியளித்து இரண்டு மாதங்களுக்குப் பின்னரும் இராணுவத்துக்கும் புலிகளுக்கும் இடையிலான மோதல் தொடர்கிறது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்குள் நாளொன்றுக்கு ஒரு கிலோ மீற்றர் என்ற வேகத்தில் முன்னேறி வந்த இராணுவம் தற்போது நத்தை வேகத்தில் நகர்கின்றது.

500 விடுதலைப் புலிகளே எஞ்சியுள்ளனர் என்று இராணுவம் தெரிவிக்கின்றது. எனினும், இவ்வாறு எஞ்சியிருப்பவர்கள் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்துகின்றனர்.

### மிக நெருங்கிய தூரத்தில்

இரு தரப்பினதும் முன்னரங்க நிலைகளுக்கு இடையில் மிகச் சிறிய தூரமேயுள்ளதால் விடுதலைப் புலிகளை பலவீனப்படுத்துவதற்கு ஆட்லறி பீரங்கிகள், விமானங்கள் மற்றும் பல்குழல் பீரங்கிகளை பயன்படுத்த முடியாதுள்ளதாக இராணுவ அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

நாங்கள் மிக அருகில் உள்ளோம். நீண்ட தூர ஆயுதங்களை பயன்படுத்த முடியாது. இதனால் முன்னேற்றம் மிக மிக மெதுவாகத்தான் காணப்படும் என்றார் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயகார.

இதேவேளை பெயர் குறிப்பிட விரும்பாத மூத்த இராணுவ அதிகாரியொருவர், ''விடுதலைப் புலிகள் பாரிய தற்கொலை தாக்குதல்கள் மேற்கொள்ளலாம். இதற்கு தமது உறுப்பினர்களையும் பொது மக்களையும் பயன்படுத்தலாம்'' என்று கூறினார்.

இலங்கையின் சுதந்திர தினமான பெப்ரவரி - 4 இல் உரையாற்றிய ஜனாதிபதி உடனடி வெற்றி குறித்து எதிர்வு கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

- இப்படி ஏ.எவ்.பி. செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-சி)

# வாகரை யுவதியைக் காணோம்; சந்தேகத்தில் கணவர் கைது

வாகரை, ஏப்.1

மட்டக்களப்பு வாகரைப் பிரதேசத்தில் இளம் குடும்பப் பெண் ஒருவர் காணாமல் போனமை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் அவரது கணவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பன்னிச்சன்கேணியைச் சேர்ந்த ஆறுமுகம் வனஜா (வயது - 24) கடந்த மாதம் 24ஆம் திகதி வீட்டிலிருந்து நேர்முகப் பரீட்சை ஒன்றுக்காக சென்றுகொண்டிருந்த வேளை, ஆட்டோவில் வந்தவர்கள் எனக் கூறப்படும் நபர்களால் கடத்தப்பட்டுக் காணாமல் போயுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

பெண்ணின் தந்தை பொலிஸில் செய்த முறைப்பாட்டில் அவரது கணவரான வாழைச்சேனையைச் சேர்ந்த ஆறுமுகம் தவராசா மீது சந்தேகம் இருப்பதாகத் தெரிவித்திருந்தார். இதனையடுத்து கணவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, நேற்று வாழைச்சேனை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தபட்டார். இவரை எதிர் வரும் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் மாணிக்கவாசகர் கணேசராசா உத்தரவிட்டார். (சி)

# வவுனியா அகதி முகாம்களில் தங்கியுள்ளோருக்கு விசேட அடையாள அட்டைகள் வழங்க நடவடிக்கை

கொழும்பு, ஏப்.1

வவுனியா அகதி முகாம்களில் தங்கியுள்ள வன்னி அகதிகளுக்கு விசேட அடையாள அட்டைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

அவரது அமைச்சில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்து தினமும் மக்கள் வவுனியாவுக்கு வருகை தந்து கொண்டிருக்கின்றனர்.

வவுனியாவில் அவர்களுக்கென அமைக்கப்பட்டுள்ள நலன்புரி முகாம்களில் அவர்கள் தங்கவைக்கப்பட்டு அரசால் [illegible] மரிக்கப்படுகின்றனர். அவர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

மாணவர்களுக்கு விசேட பாடசாலைகள் கூட அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் இடம்பெயர்ந்து வரும் மக்களும் இவ்வாறு பராமரிக்கப்படுகின்றனர்.

இந்த முகாம்களில் உள்ள மக்களின் நடமாட்டத்தை உறுதிப்படுத்துவதற்காக அவர்களுக்கு விசேட அடையாள அட்டைகளை வழங்க தற்போது இவர்களின் விவரங்கள் திரட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த நடவடிக்கை முடிந்ததும் அவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்படும்.

இதேவேளை, வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள மக்களுக்கும் நாம் உணவுப் பொருள்களை [illegible]ப்புகின்றோம். அவற்றுள் 50 [illegible]தத்திற்கும் அதிகமானவற்றைப் புலிகள் பிடுங்கிக் கொள்[illegible] தெரிந்தும் கூட மக்களுக்காகத் தொடர்ந்தும் உணவுப் பொருள்களை அனுப்பிய வண்ணமே உள்ளோம் - என்றார். (சி)

# வவுனியாவில் மரநிழலில் வகுப்பு நடந்த வேளை மரம் முறிந்து வீழ்ந்து ஆசிரியை, மாணவி மரணம்

யாழ்ப்பாணம், ஏப்.1

வவுனியா, மகாரம்பைக்குளம் பகுதியிலுள்ள திருஞானசம்பந்தன் தமிழ்க் கலவன் பாடசாலையில் பாலைமரம் முறிந்து வீழ்ந்து ஆசிரியை ஒருவரும் மாணவி ஒருவரும் உயிரிழந்தனர். மேலும் 30 மாணவர்கள் படுகாயமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் நேற்று மதியம் 12.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

காயமடைந்தவர்கள் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

பாடசாலை வளாகத்திற்குள் மரநிழலில் 7 ஆம் ஆண்டு மாணவ, மாணவிகள் கல்விச் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்த சமயமே குறித்த மரம் முறிந்து வீழ்ந்துள்ளது.

கதிர்காமத்தம்பி ராகினி என்ற ஆசிரியையும் மாணவியும் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(1-25)

# தென்மராட்சி வர்த்தக நிலையங்களில் சனியன்று திடீர் பரிசோதனை

## பாவனைக்குதவாத பொருள்கள் அழிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.1

சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினர் கடந்த சனிக்கிழமை சாவகச்சேரி நகரப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்கள் மீது திடீர் பரிசோதனைகளை மேற்கொண் டனர்.

வர்த்தக நிலையங்களில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த பாவனைக்கு உதவாத உணவுப் பொருள்களும் திகதி காலாவதியான பொருள்களும் கைப்பற்றப் பட்டன.

பிஸ்கட் வகைகள், மென்பானங்கள், கோடியல், ஜீவாகாரம், நூடில்ஸ், இனிப்பு வகைகள், ரொபி வகைகள், வெளிநாட்டில் இருந்து தருவிக்கப்பட்ட பாவனைக்கு உதவாத பாக்குப் பைக்கற் உட்பட பல பொருள்களை கைப்பற்றினர். இவை அனைத்தும் வர்த்தக உரிமையாளர்களின் ஒத்துழைப்புடன் அழிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (1-207)

# தந்தை செல்வாவின் நினைவுதினம் நேற்று யாழ். நகரில் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.1

தந்தை செல்வாவின் 111 ஆவது பிறந்த தினத்தை ஒட்டி விசேட நிகழ்வுகள் நேற்று இடம்பெற்றன.

முற்றவெளியில் அமைந்துள்ள தந்தை செல்வாவின் நினைவாலயத்தில் நேற்றுக் காலை 9.30 மணிக்கு விசேட அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

தந்தை செல்வா நினைவு அறங்காவலர் குழுவின் தலைவர் முன்னாள் பேராயர் எஸ்.ஜெபநேசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரமுகர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து அஞ்சலி செலுத்தினர்.

நேற்று மாலை 5 மணிக்கு யாழ்.கிறிஸ்தவ ஒன்றியத்தின் ஏற்பாட்டில் தந்தை செல்வாவின் சேவைகளுக்கு நன்றி செலுத்தும் நிகழ்வு இடம்பெற்றது.

சுண்டுக்குளி பரியோவான் ஆலயத்தில் ஒன்றியத் தலைவர் வண எஸ்.கே.கதிர்காமர் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட தென்னிந்தியத் திருச்சபையின் முன்னாள் பேராயர் எஸ்.ஜெபநேசன் தந்தை செல்வாவின் சேவைகள் குறித்து சிறப்புரை ஆற்றினார்.

மாணவர்கள், பொதுமக்கள் உட்பட பெருமளவானோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

தந்தை செல்வா பிறந்ததின நிகழ்வை ஒட்டி ஈ.பி.டி.பி. அமைப்பின் ஏற்பாட்டில் நேற்றுக்காலை 7.15 மணிக்கு அஞ்சலி நிகழ்வு செல்வா சதுக்கத்தில் நடத்தப்பட்டது.

யாழ். மாநகரசபை முன்னாள் உறுப்பினரான மாணிக்கம் கனகரத்தினம் தந்தையின் திருவுருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்தார்.

ஈ.பி.டி.பி. அமைப்பின் யாழ். மாவட்ட பிரதி அமைப்பாளரும் சாவகச்சேரி நகர சபையின் முன்னாள் எதிக்கட்சித் தலைவருமான சூசைமுத்து அலெக்ஸ்சாண்டர் (சாள்ஸ்) தலைமையில் கட்சிப் பிரமுகர்கள் மலரஞ்சலி செலுத்தினர்.

சூசைமுத்து அலெக்ஸ்சாண்டர், சமூக சேவைகள் அமைப்பின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் கைலாசபிள்ளை தெய்வேந்திரன் ஆகியோர் உரை நிகழ்த்தினர். (1-4)



தந்தை செல்வா நினைவாலயத்தில் ஈ.பி.டி.பி. அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில் யாழ். மாநகரசபை முன்னாள் உறுப்பினரான மாணிக்கம் கனகரத்தினம் தந்தையின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிப்பதையும்-

ஈ.பி.டி.பி. அமைப்பின் யாழ். மாவட்ட பிரதி அமைப்பாளரும் சாவகச்சேரி நகர சபையின் முன்னாள் எதிர்க் கட்சித் தலைவருமான சூசைமுத்து அலெக்ஸ் சாண்டர் (சாள்ஸ்) தலைமையில் கட்சிப் பிரமுகர்கள் மலரஞ்சலி செலுத்துவதையும் படங்களில் காணலாம்.



# கடும் போராட்டத்தின் பின் லாகூர் பொலிஸ் மையம் தீவிரவாதிகளிடமிருந்து மீட்பு; 22 பேர் உயிரிழப்பு

லாகூர், ஏப்.1

லாகூர் பொலிஸ் பயிற்சி மையம், கடும் போராட்டத்துக்குப் பின்னர் தீவிரவாதிகளிடமிருந்து மீட்கப்பட்டது. இதில் சில தீவிர வாதிகள் கொல்லப்பட்டுவிட்டனர். சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர் என தகவல்கள் தெரிவிக்கின்றன. இச்சம்பவத்தில் 22 பேர் பலியாகியுள்ளனர்.

இலங்கைக் கிரிக்கெட் வீரர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட இடத்திற்கு வெகு அருகிலுள்ள மனவன் பொலிஸ் பயிற்சிமையம் மீது திங்கட்கிழமை காலை உள்ளூர் நேரப்படி 7.30 மணிக்கு தீவரவாதிகள் படுபயங்கரத் தாக்குதல்களை நடத்தினார்கள். இவற்றில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த பல பொலிஸார் பலியாயினர்.

கால்களில் குண்டடிப்பட்ட சில பொலிஸார் கைகளைத் தரையில் ஊன்றியவாறே தவழ்ந்து சென்றனர்.பொலிஸாருக்கும் தீவிரவாதிகளுக்குமிடையே கடும் துப்பாக்கிச் சமர் நடைபெற்றது. அதேவேளை, தீவிரவாதிகள் பயிற்சி மையத்தைக் கைப்பற்றி பலரை பணயக் கைதிகளாக சிறைபிடித்தார்கள். இச் சமயத்தில் தீவிரவாதிகளின் தாக்குதல்களைச் சமாளிக்க துணை இராணுவத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

இத்தாக்குதலில் சம்பந்தப்பட்ட தீவிரவாதியொருவர் பொலிஸ் வாகனமொன்றில் ஏறி, அண்மையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த பாதுகாப்புப் படைக்குச் சொந்தமான ஹெலிக்கொப்டெரை நோக்கி விரைந்தார். எனினும், அங்கு விரைந்து வந்த பாதுகாப்புப் படையினர் அவரை துரத்திப் பிடித்து கைது செய்தனர் என்றும் அவர் கூறினார்.

இது குறித்து பாதுகாப்புப் படை அதிகாரியொருவர் குறிப்பிடுகையில், ''கைது செய்யப்பட்ட நபரிடம் சில வெடிகுண்டுகளும், துப்பாக்கியுமிருந்தன. தாடியோடு காணப்பட்ட அவர், கிழக்கு ஈரானில் பேசப்படும் பாஸ்டோ மொழியில் பேசினார். அவர் ஒரு பாகிஸ்தானியர் அல்லர்'' என்றார்.

இது குறித்து பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் ரஹ்மான் மாலிக் குறிப்பிடுகையில், ''பயங்கரவாதத் தாக்குதல் நடந்த பகுதியில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. பயங்கரவாதிகளைப் பிடிக்க அந்த மையத் தைச் சுற்றி பாதுகாப்புப் படையினர் குவிக்கப்பட்டனர். சூழ்நிலை ஹெலிகொப்டர்கள் மூலம் கண்காணிக்கப்பட்டது'' என்றார்.

''லஷ்கர்-இ-தொய்பா, ஜெய்ஷ்-இ-முகம்மது பயங்கரவாதிகள் இந்தத் தாக்குதலை நடத்தி இருக்கலாம். அதேவேளை, பாகிஸ்தானில் பயங்கரவாதிகளை முறியடிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தச் சம்பவத்தில் எத்தனை பேர் உயிரிழந்தனர் என்பதை இப்போது தெளிவாகக் கூற முடியாது. லாகூர் நகரம் முழுவதிலும் அவசரகால நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது'' என லாகூர் நகர பொலிஸ் ஆணையாளர் சுலைமான் தெரிவித்தார்.

பயங்கரவாதிகள் பொலிஸாரைப் போல உடையணிந்து இருந்தனர். முதுகில் பெரிய பைகளுடன் பயிற்சி மையத்துக்குள் நுழைந்தனர் என சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர். இதனிடையே, தாக்குதல் சம்பவம் நிகழ்ந்த இடத்துக்கு அருகே பயங்கரவாதி என்று சந்தேகிக்கப்படும் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசாங்கம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

**ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் கட்சியின் களுத்துறை மாவட்ட அமைப்பாளர்களின் கூட்டத்தில் ஜனாதிபதி நேற்றுக் காலை உரையாற்றினார். அப்போதே, போர் முடிவுறும் வரையில், எந்தச் சூழ்நிலையிலும், எத்தகைய சந்தர்ப்பத்திலும் அரசு விடுதலைப்புலிகளுடன் போர் நிறுத்தம் செய்ய மாட்டாது என்று கூறினார்.**

**பொதுமக்கள் தங்கியுள்ள மோதல் பிரதேசங்களில் தாக்குதல் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துமாறு படையினருக்கு அறிவுறுத்தி உள்ளோம். அதனாலேயே வன்னியில் எஞ்சியுள்ள சிறுபகுதியைக் கைப்பற்றுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என்றும் ஜனாதிபதி விளக்கினார்.**

அவர் நேற்றைய கூட்டத்தில் மேலும் கூறியதாவது:-

வருங்காலச் சந்ததியினரின் எதிர்காலத்தை மனதில் கொண்டே சர்வதேச நாணய நிதியத்திடம் 1.9 பில்லியன் டொலர் கடன் உதவி கோரப்பட்டுள்ளது. ஆனால், கடனைப் பெறும்பொருட்டு நிபந்தனைகளும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. நாட்டின் நலன்களை விட்டுக்கொடுக்கவும் மாட்டோம்.

கடந்தகாலத் தலைவர்கள் யுத்தத்தினால் அபிவிருத்திகள் தடைப்படுகின்றன என குற்றஞ்சுமத்தினர்.

எமது அரசோ பயங்கரவாதத்தை அழிக்கும் அதேவேளை, அபிவிருத்தியையும் மேற்கொள்கிறது.

நுரைச்சோலை அனல்மின்திட்டம், மேல்கொத்மலைத் திட்டம் உட்படப் பல அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டு வருகிறது.

மேல் மாகாண சபையில் கூடுதலான விருப்பு வாக்குகளைப் பெறுபவர்கள் மட்டுமே முதலமைச்சராக நியமிக்கப்பட மாட்டார். கட்சியில் வகிக்கும் சிரேஷ்ட ஸ்தானமுமே இதன்போது கருத்தில்கொள்ளப்படும்.

இதனால் விருப்பு வாக்குகளுக்காக கட்சி உறுப்பினர்கள் மோதலில் ஈடுபட வேண்டாம் - என்றார் ஜனாதிபதி. (அ)

## திருமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களை விடுதலைப் புலிகள் திருகோணமலை சிறுமி கொலை தொடர்பாக கைது செய்யப்பட்டிருந்த சந்தேக நபர்களிடம் வழங்கியிருந்தனர். அதனை மீட்பதற்காக அவர்களை கண்ணியாப்பகுதிக்கு பொலி ஸார் அழைத்துச் சென்றனர். அங்கு பதுங் கியிருந்த விடுதலைப் புலிகளுக்கும் பொலிஸாருக்கும் இடையில் மோதல் நடைபெற்றது. அதிலேயே இந்த இரு சந் தேக நபர்களும் உயிரிழந்தனர். மேலும் பொலிஸார் இருவர் காயமடைந்தனர்'' என்று பொலிஸ் அத்தியட்சகர் வாஸ் குண வர்த்தன தெரிவித்தார்.

வர்ஷா கொலை தொடர்பாக கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் ஒருவர் ஏற்கனவே சுட்டுக் கொல்லப்பட்டார். இன்னொருவர் சைனைட் உட்கொண்டு உயிரிழந்தார் என்பது அறிந்ததே.

தற்போது மேலும் இருவர் பலியாகியுள்ளனர் என்று பொலிஸ் தரப்பில் அறிவிக்கப்பட்டிருக்கின்றமை பெரும் பரப்பரப்பை ஏற்படுத்தியுள்ளது. (சி)

## வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த அகதி முகாம்களின் பராமரிப்புப் பணியை சிவில் நிர்வாக அதிகாரிகளிடம் ஒப்படைக்குமாறு மனித உரிமைகள் தொடர்பான ஐ.நா. அதிகாரி ஜோன் ஹோம்ஸ் இலங்கை அரசிடம் வேண்டுகோள் விடுத்தார்.

அவரின் சிபாரிசுகளை ஏற்று நாம் படையினரை அந்த முகாம்களிலிருந்து அகற்றி, அவை இப்போது மீள்குடியேற்ற அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையகத்தினால் இலங்கைக்கு எதிராக முன்னெடுக்கப்படவிருந்த திட்டங்களை இலங்கை அரசு வெற்றிகரமாக முறியடித்துள்ளது.

இலங்கையின் உண்மையான நிலைவரம் குறித்தும், அரசின் மனிதாபிமான நடவடிக்கைகள் குறித்தும் ஜெனீவாவில் இடம்பெற்ற மனித உரிமைகள் ஆணையகத்தில் நாம் விளக்கமளித்தோம். வழமையாக ஒரு வார காலம் இடம்பெறும் இக்கூட்டம் இம்முறை உயர் மட்ட அமர்வுகள் காரணமாக ஒரு மாதத்திற்கு மேல் நீடித்தது.

ஜெனீவா விஜயத்தின்போது அங்கு வருகை தந்திருந்த ஏனைய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள், மனித உரிமை அமைச்சர்கள் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடினேன். மேற்கு பிராந்திய அமைச்சர்களைச் சந்தித்து கலந்துரையாடுவதற்கு நாம் அழைப்பு விடுத்தபோதும், அதற்கான வாய்ப்பினை அவர்கள் தரவில்லை.

எனினும், டென்மார்க், சுவீடன், பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சர்களுடன் நாம் கலந்துரையாடினோம். இலங்கையின் உண்மை நிலைவரம் குறித்து இலங்கை அரசு தெளிவுபடுத்தத் தயாராக இருப்பதாக அவர்களுக்கு தெரிவித்துள்ளோம். அத்துடன் ஐ.நா. செயலாளர், மனித உரிமைகள் ஆணையாளர் ஆகியோரையும் சந்தித்துக் கலந்துரையாடினோம்.

இலங்கைக்கு எதிராகத் தீர்மானங்களை, விவாதங்களை மேற்கொள்ள பல அமைப்புகள் போராட்டங்களை நடத்தின. இலங்கை விடயத்தை மனித உரிமைகள் ஆணையகத்தில் விவாதத்திற்கு எடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

எனினும், எமது தோழமை நாடுகள் எமக்கு ஆதரவாக இருந்தன - என்றார்.

## மனிதாபிமான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வில் தீர்மானிக்கப்படலாம் என மேலும் தெரிவித்துள்ள அவர் இதுகுறித்து மேலதிக விவரங்கள் எதனையும் வெளியிடவில்லை.

வன்னியில் மோதல் நடைபெறும் பகுதிகளில் சிக்கியுள்ள பல்லாயிரக்கணக்கான மக்கள் பாதுகாப்பாக வெளியேறுவதற் காக இராணுவ நடவடிக்கையை இடை நிறுத்துமாறு சர்வதேச சமூகம் இலங்கையை வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பல்குழல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் பணிப்பாளர் டாக்டர் சத்தியமூர்த்தி நேற்று இத்தகவலை பி.பி.ஸிக்குத் தெரிவித்தார்.

மோதல்கள் காரணமாக பல்குழல் மற்றும் ஷெல் தாக்குதல்களால் நேற்றுமுன்தினம் சுமார் 156 சிவிலியன்களும் நேற்று சுமார் 126 சிவிலியன்களுமாக சுமார் 282 பேர் படுகாயமடைந்த நிலையில் புது மாத்தளன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் 100 பேரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளது. தற்போது சுமார் 300 பேர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் - என்று அவர் விவரித்தார்.

இதேவேளை கடந்த பத்தொன்பது நாள்களுக்கு முன் ஒரு தொகுதி மருந்துப் பொருள்கள் புதுமாத்தளன் வைத்தியசாலைக்குக் கிடைத்தன. அவற்றுள் ஒரு சில மருந்துகளைத் தவிர பல முக்கியமான மருந்துகள் முடிவடைந்து விட்டன - என்றும் தெரிவித்தார்.

இதற்கிடையில், நேற்று முன்தினம் புதுமாத்தளன் வைத்தியசாலையிலிருந்து புல்மோட்டை வைத்தியசாலைக்கு கப்பலில் அழைத்து செல்லப்பட்ட வேளையில் இடைவழியில்மூன்றுபெண்கள்,ஒருஆண், ஒரு குழந்தை என ஐந்து பேர் மரணமான தாக திருகோணமலை வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்ததாக பி.பி.ஸி நேற்றிரவு தெரிவித்தது. (அ-7)

## உணவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னிட்டு 1200 மெற்றிக் தொன் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் இன்று அனுப்பி வைக்கப்படவுள்ளன என அரசு அறிவித்துள்ளது.

பாதுகாப்புச் செயலாளர் மற்றும் முப்படைத் தளபதிகள் ஆகியோரின் கோரிக்கைக்கு இணங்க இப்பொருள்களை பாதுகாப்பு வலயத்துக்கு அனுப்பி வைக்க ஜனாதிபதி பணிப்புரை வழங்கியுள்ளார்.

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பசில் ராஜபக்ஷவின் மேற்பார்வையில் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம், கடற்படை உயர் அதிகாரிகள், திருகோணமலை அரச அதிபர் மற்றும் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு அதிகாரிகள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இதன்படி அத்தியாவசியச் சேவைகள் ஆணையாளர் நாயகத்தின் ஏற்பாட்டில் 'சிட்டி ஒவ் டப்ளின்' என்ற கப்பல் மூலம் உணவுப் பொருள்களும் மருந்துப் பொருள்களும் இன்று அனுப்பிவைக்கப்படவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

அரிசி, பருப்பு, சீனி, மரக்கறி எண்ணெய், கோதுமை மா, குழந்தைப் பாலுணவு, சரக்குத்தூள், சோயா, வெள்ளைப்பூடு, தேயிலை, மரக்கறி வகைகள் மற்றும் சுகாதார உபகரணங்களும் சுகாதரா அமைச்சினால் வழங்கப்பட்ட 55 வகையான மருந்து வகைகளும் அனுப்பி வைக்கப்படவுள்ளன.

அத்துடன் யுனிசெப் நிவனத்தினால் வழங்கப்பட்டுள்ள பொருள்களும் இதில் அனுப்பி வைக்கப்படும். படுக்கை விரிப்புக்கள், பிளாஸ்டிக் பொருள்கள், நுளம்பு வலைகள், சமையலறைப் பயன்பாட்டுப் பொருள்கள், ஆண்கள் மற்றும் பெண்களுக்கான ஆடைகள், துவாய்கள் மற்றும் சவர்க்காரம் என்பன இதில் அடங்கும்.

(அ-சி)

## புதுக்குடியிருப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இச்சமரில் விடுதலைப் புலிகளில் 20 பேர் உயிரிழந்தனர். மேலும் 11 பேர் வரை படுகாயமடைந்தனர் என களமுனைத் தகவல்களை மேற்கோள்காட்டி படைத்தரப்புச் செய்தி வெளியிட்டிருந்தது.

எனினும் இச்சண்டையில் படைத்தரப்புக்கு சிறியளவான இழப்பு ஏற்பட்டது என்று படைத்தரப்பில் கூறப்பட்டது.

அதேவேளை, முன்னரங்க நிலைகளிலிருந்து இராணுவத்தினர் மேற்கொண்ட சினைப்பர் தாக்குதலில் விடுதலைப் புலிகளின் 11 பேர் உயிரிழந்தனர் என்றும் படைத்தரப்புச் செய்திகள் மேலும் தெரிவித்தன.

அதேவேளை, நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை தேவாவெட்டிப் பகுதியில் 55ஆவது படைப்பிரிவு மேற்கொண்ட நடவடிக்கையின் போது விடுதலைப் புலிகளின் மண்ணணை ஒன்றைக் கைப்பற்றியுள்ளனர். இதில் விடுதலைப் புலிகளுக்கு இழப்புக்கள் ஏற்பட்டன என்று படைத்தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

இதேசமயம், புதுக்குடியிருப்புப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சமரின் பின்னர் படையினர் மேற்கொண்ட தேடுதலின்போது விடுதலைப் புலிகளின் 5 சடலங்களை மீட்டனர் என்று படைத்தரப்பு வெளியிட்ட செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், இச்சமர்களில் இரு தரப்புக்களிலும் ஏற்பட்ட உயிரிழப்புக்களின் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் எதுவும் கிடைக்கப் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யத்தின் அமெரிக்க நிறைவேற்று அதிகாரி மெக் லாண்டாசாகர் ஆகியோருக்கு எதிராகவே இவ்வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சுமார் 84 பக்கங்களைக் கொண்ட இந்த மனுவில் சர்வதேச நாணய நிதியத்தின் ஆளுநர் உட்பட்டவர்களும் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் மனித உரிமைகள் பாரிய அளவில் மீறப்பட்டு வருகின்றன. தமிழர்கள் படுகொலைசெய்யப்பட்டு வருகின்ற நிலையில் இலங்கைக்கு 1.9 பில்லியன் டொலர்கள் வழங்கப்படுவது அமெரிக்க அரசியலமைப்பை மீறும் செயலென அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் காணாமல் போதல் மற்றும் சட்டவிரோதக் கொலைகள் இடம்பெறுகின்றன. பொதுமக்கள் மீது குண்டுத் தாக்குதலை நடத்துவது ஜெனிவா ஹேக் உடன்படிக்கைக்கு எதிரானதாகும்.

அத்துடன், பாலியன் வன்புணர்வுகள், மனிதநேயமற்ற செயல்கள், நீதியற்ற முறையில் ஆள்கள் தடுத்துவைக்கப்படுதல், கைதுகள், வைத்திய வசதிகள் வழங்கப்படாமை, பட்டினி, அரசியல் பிரதிநிதித்துவம் மறுப்பு, பேச்சுச் சுதந்திரமின்மை, சித்திரவதைகள் என்பன இலங்கையில் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன எனவும் அந்த மனுவில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இந்த வழக்கின் பிரதிகள் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம், திறைசேரி போன்றவற்றிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என தமிழர்கள் படுகொலைக்கெதிரான அமைப்பின் ஆலோசகர் புருஸ்பெய்ன் தெரிவித்துள்ளார்.

(சி)


மானிப்பாயில்...........
100% Practical Education!!
பல புதிய விடயங்களுடன்
03/04/2009 அன்று புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன !!
Diploma in Mobile Phone Repairing
(சகல வகையான கைத்தொலை பேசிகளையும் மிகக் குறுகிய காலத்தில் நீங்களே திருத்துவதற்கான தொழில்சார் கற்கை நெறி)
மேலதிக விபரங்களுக்கு :-
UNI TECHNOLOGY
ICT Education Trainers
Manipay T.P:- 060 - 221 - 6433
(மானிப்பாய் பிரதேச சபைக்கு நேர் எதிரே)

BITSMANS
கல்வி நிறுவனம் மானிப்பாய்
A/L வரலாறு
திரு M.பத்மன்
B.A (HONS) Hist spl. M.A.
A/L 2010 புதிய பிரிவு அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
A/L 2011 வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

WANTED
Applications are Invited From G.C.E. (A/L) qualified Persons for the following posts to carry out Audit in a Group of Companies owned by a reputed firm in Jaffna.
a) Audit officer:- with five years experience in the relevant field.
b) Audit Clerk:- with three years experience in the relevant field.
★ Preference wil be given to those with computer literacy in M.S.Office and Accounting package.
★ Salary negotiable.
★ Applications close on 05.04.2009 and should be sent to
C/O,
Uthayan,
Jaffna.
ADVT. No: 3187.
Please mark the relevant post in the top left hand corner of the envelope.

விக்னா
கல்வி நிறுவனம்
தலைமையகம்: 52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
கிளை: 417, கே.கே.எஸ் வீதி, யாழ். இந்துக்கல்லூரி அருகில்
தவணை 2ற்கான பிரிவுகள்
தரம்- 6, 7, 8, 9, 10, O/L வகுப்புக்கள்
ஆரம்பம்: 02.04.2009 வியாழன் மாலை 3 மணிக்கு
புதிய அனுமதிகளும் வழங்கப்படுகின்றன.
பிரிவு - I - O/L DAY CLASS
இரு இடங்களிலும் ஆரம்பம்: 10.04.2009
8.30 - 2.00
இம்முறையும் பிரிவு மேட்டுமே.

PHYSICS ⟹ K.Selvan
HEAT A/L 2010
ஆரம்பம்:- 04.04.2009 (SAT, 7.45)
[sat, sun- 7.45am - 8.45am]
NEC CLOCK TOWER ROAD, JAFFNA.
[பெருமாள் கோயிலுக்கு அருகாமை]

வலி மேற்கு கணித விஞ்ஞான
மாணவர்கட்கு ஓர் நற்செய்தி
Subra(14)
சித்தன்கேணியில்
THE SCIENCE CORNER
ஆசிரியர் குழாமின் சேவை
ஆரம்பம் - April 5 (ஞாயிறு) 3.00 மணி

நவீன தொழில்நுட்பங்கள், Advanced Video Editing மென்பொருட்களையும்
உள்ளடக்கிய தமிழ் மொழி விளக்கங்களுடனான 100% online வகுப்புகள்
50% special offer மூலமான முழுமையான Video Editing கற்கை நெறி
Diploma in Video Production & Multimedia
Introduction to Digital Video, Adobe Premiere Pro CS3, Particlelllusion, Pinnacle Studio, COOL 3D Studio, Adobe After Effects, Nuendo, & VCD Cutter
அனைத்து டிப்ளோமா கற்கை நெறிகளுக்குமான புதிய பிரிவுகள் ஆரம்பம் : 2/4/2009, 4/4/2009, 6/4/2009
முழுமையானதும் தரமானதுமான கணினி கல்விக்கு Time: 10.30 a.m., 3.00 p.m.
DMI COMPUTER EDUCATION
NO. 113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். Tel: 021-222 4403


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.04.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.